# DEVPRAYAG, JOSHIMATH & BADRINATH TRIP

## 8th to 11th September 2022



## ITINERARY

07-09-2022 –Dep. Bangalore Kempegowda Airport 07:00 hrs,

Arr Delhi Indira Gandhi Intl Terminal: 3 09:40 hrs,

Stay at Civil Services' Officers' Institute, Chanakyapuri, New Delhi

08-09-2022 – Travel to Devaprayag – Stay in Devaprayag

09-09-2022 – Travel to Badrinath - Darshan at Devaprayag, Joshi mutt (Nanda Prayag). Visit to Mana village (the northernmost village in India) Stay at Badrinath

10-09-2022 – Darshan at Badri Nath by being part of Badri Maha Abhishek Puja (4.30 AM to 6 AM) Travel to Rishikesh Take part in Ganga Aarthi (if we reach in time). Stay at Rishikesh

11-09-2022 –Travel to New Delhi Airport

Dep. Delhi Indira Gandhi Intl Terminal 3: 19.50 hrs,

Arr Bangalore Kempegowda Airport: 22:40 hrs

Arrangements made by Usha Murali

Phone – 96633 18966, WhatsApp Group – Jai Badri Vishal

**********

பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில்

**திருக்கங்கைக்கரைக்கண்டம் (தேவப்பிரயாகை என்ற கண்டமென்னும் கடிநகர்)**

மத்தாற் கடல்கடைந்து வானோர்க் கமுதளித்த
அத்தா! எனக்குன் னடிப்போதில் –
புத்தமுதைக் கங்கைக் கரைசேருங் கண்டத்தாய்!
புண்டரிக மங்கைக் கரைசே! வழங்கு.

மந்தரமலையாகிய மத்தினாலே, திருப்பாற்கடலைக்கடைந்து தேவர்களுக்கு அமிருதத்தைக் கொடுத்தருளிய தலைவனே!
செந்தாமரைமலரில் வாழ்கின்ற பெரியபிராட்டியார்க்குத்தலைவனே,
கங்கைநதிக்கரையிற்பொருந்திய கண்டமென்னுங் கடிநகரி லெழுந்தருளியிருப்பவனே! –
அடியேனுக்கு, உனது திருவடித்தாமரையில்) தோன்றுகின்ற புதிய அமிருதத்தை கொடுத்தருள்வாயாக
(இத்தலம் இப்பொழுது தேவப்ரயாகை யென்று அறியப்படுகிறது)

*******

**திருப்பிருதி (திருப்பிரிதி – ஜோஷிமட் Refer Article)**

வழங்கு முயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்குங் கவந்தன் விறற்றோட் – கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தாற் போற்றுணிந்து வீழ்த்தான்
திருப்பிருதிக் கென்னெஞ்சே! செல்.

எனது மனமே, சஞ்சரிக்கின்ற எல்லாப்பிராணிகளையும் திரட்டியெடுத்து தனது வாய்க்குள் தள்ளி, விழுங்குந்தன்மையுள்ள, கபந்தனென்னும் அசுரனது, வலிமையுள்ள தோள்களின் மூலபாகத்தை, மலை இரண்டுபக்கத்திலும்வீழ்ந்து கிடக்கும்படி (இராமாவதாரத்தில்) – வெட்டித்தள்ளிய திருமாலினது, திருப்பிருதியென்னுந் திவ்வியதலத்திற்கு நீ சென்று சேர்வாயாக (திருப்பிரிதி என்றழைக்கப்படும் ஜோஷி மட் எனும் திவ்ய தேசத்தில்தான் ஆதிசங்கரர் ஸ்ரீ சங்கர பாஷ்யத்தை இயற்றினார்.)

*******

**திருவதரியாச்சிரமம் (பத்ரிநாத்)**

தாட்கடிமை யென்று தமையுணாரார்க் கெட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளுங் கேசவனை – வேட்கையொடு
போவதரி தானாலும் போய்த்தொழுவோ நெஞ்சமே!
மாவதரி யாச்சிரமத்து.

எனது மனமே, தனது திருவடிகட்கு அடிமைப்பட்டவ ரென்று தங்களது ஸ்வரூபத்தை,அறியாத இவ்வுலகத்தவர்க்கு, (ஆத்மாவினது ஸ்வரூபத்தை உள்ளபடிஉணர்த்துவதான) திருவஷ்டாக்ஷர மகாமந்திரத்தை காதிற்படும்படி கருணையோடு வெளியிட்ட திருமாலை, யாத்திரை செய்வது வருத்தமுடையதாயிருந்தாலும்,சிறந்த பதரிகாச்சிரம மென்னுந் திவ்வியதலத்தில் பக்தியுடனே போய் வணங்குவோம்

*******

தேவப்பிரயாகை என்ற கண்டமென்னும் கடிநகர் பெரியாழ்வாரால் 11 பாசுரங்களால் (பெரியாழ்வார் திருமொழி 4.7) மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

**391 தங்கையை மூக்கும்** தமையனைத் தலையும் தடிந்த
எம்தாசரதிபோய்*
எங்கும்தன் புகழா விருந்து அரசாண்ட
எம்புருடோத்தமனிருக்கை*
கங்கை கங்கை யென்ற வாசகத்தாலே
கடுவினை களைந்திடுகிற்கும்
கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற
கண்டமென்னும் கடிநகரே

**392 சலம் பொதியுடம்பின்** தழலுமிழ் பேழ்வாய்ச்
சந்திரன் வெங்கதிர் அஞ்ச*
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ண வுருவின்
மால்புருடோ த்தமன் வாழ்வு*
நலம்திகழ்சடையான் முடிக்கொன்றைமலரும்
நாரணன் பாதத்துழாயும்*
கலந்திழி புனலால் புகர்படுகங்கைக்
கண்டமென்னும் கடிநகரே

**393 அதிர்முகமுடைய** வலம்புரி குமிழ்த்தி

அழலுமிழ் ஆழிகொண்டெறிந்து* அங்கு

எதிர்முக வசுரர் தலைகளையிடறும் எ

ம்புருடோ த்தமனிருக்கை*

சதுமுகன் கையில் சதுப்புயன்தாளில்

சங்கரன்சடையினில் தங்கி*

கதிர்முகமணி கொண்டிழி புனல்கங்கைக்

கண்டமென்னும் கடிநகரே

**394 இமையவர் இறுமாந்திருந்** தரசாள

ஏற்று வந்தெதிர் பொருசேனை*

நமபுரம் நணுக நாந்தகம் விசிறும்

நம்புருடோத்தமன் நகர்தான்*

இமவந்தம் தொடங்கி இருங்கடலளவும்

இருகரை உலகிரைத்தாட*

கமையுடைப் பெருமைக் கங்கையின் கரைமேல்

கண்டமென்னும் கடிநகரே

**395 உழுவதோர் படையும்** உலக்கையும் வில்லும்

ஒண்சுட ராழியும் சங்கும்*

மழுவொடு வாளும் படைக்கல முடைய
மால்புருடோ த்தமன் வாழ்வு*
எழுமையும் கூடி ஈண்டிய பாவம்
இறைப்பொழு தளவினில் எல்லாம்*
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரைமேல்
கண்டமென்னும் கடிநகரே

**396 தலைப் பெய்து** குமுறிச்சலம் பொதிமேகம்
சலசல பொழிந்திடக் கண்டு*
மலைப்பெருங் குடையால் மறைத்தவன் மதுரை
மால்புருடோத்தமன் வாழ்வு*
அலைப்புடைத் திரைவாய் அருந்தவ முனிவர்
அவபிரதம் குடைந்தாட*
கலப்பைகள் கொழிக்கும் கங்கையின் கரைமேல்
கண்டமென்னும் கடிநகரே

**397 விற்பிடித் திறுத்து** வேழத்தை முறுக்கி
மேலிருந்தவன் தலைசாடி*
மற்பொருதெழப் பாய்ந்து அரையன யுதைத்த
மால்புருடோத்தமன் வாழ்வு*
அற்புத முடைய அயிராவத மதமும்

அவரிளம் படியரொண் சாந்தும் *

கற்பக மலரும் கலந்திழி கங்கைக்

கண்டமென்னும் கடிநகரே

**398 திரைபொரு கடல்சூழ்** திண்மதிள் துவரைவேந்து

தன்மைத்துனன் மார்க்காய்*

அரசினை யவிய அரசினை யருளும்

அரிபுருடோத்தம னமர்வு *

நிரைநிரை யாக நெடியன யூபம்

நிரந்தரம் ஒழுக்குவிட்டு* இரண்டு

கரைபுரை வேள்விப் புகைகமழ் கங்கைக்

கண்டமென்னும் கடிநகரே

**399 வடதிசை மதுரை** சாளக்கிராமம்

வைகுந்தம் துவரை அயோத்தி*

இடமுடை வதரி யிடவகையுடைய

எம்புருடோத்தம னிருக்கை*

தடவரை யதிரத் தரணி விண்டிடியத்

தலைப்பற்றிக் கரைமரம்சாடி*

கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக்

கண்டமென்னும் கடிநகரே

**400 மூன்றெழுத்ததனை** மூன்றெழுத்ததனால்
மூன்றெழுத்தாக்கி* மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கு இரக்கம் நன்குடைய
எம்புருடோத்தம னிருக்கை*
மூன்றடிநிமிர்த்து மூன்றினில்தோன்றி
மூன்றினில் மூன்றுருவானான்*
கான்தடம் பொழில்சூழ் கங்கையின் கரைமேல்
கண்டமென்னும் கடிநகரே

**401 பொங்கொலி கங்கைக்** கரைமலி கண்டத்து
உறைபுருடோத்தமனடிமேல்*
வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க்கோன்
விட்டுசித்தன் விருப்புற்று*
தங்கிய அன்பால் செய்ததமிழ்மாலை
தங்கிய நாவுடையார்க்கு*
கங்கையில் திருமால் கழலிணைக்கீழே
குளித்திருந்த கணக்காமே

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

*******

திருப்பிரிதி என்றழைக்கப்படும் ஜோஷி மட் (Refer Article later) திருமங்கை ஆழ்வாரால் 10 பாசுரங்களால் (பெரிய திருமொழி 1.2) மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

958 **வாலிமாவலத்தொருவனதுடல்**கெட
வரிசிலைவளைவித்து,அன்று
ஏலநாறுதண்தடம்பொழிலிடம்பெற
இருந்தநலிமய்யத்துள்,
ஆலிமாமுகிலதிர்தர அருவரை
அகடுறமுகடேறி,
பீலிமாமயில்நடஞ்செயும்தடஞ்சுனைப்
பிரிதிசென்றடைநெஞ்சே.

959 **கலங்கமாக்கடலரிகுலம்**பணிசெய்ய
அருவரையணைகட்டி,
இலங்கைமாநகர்ப்பொடிசெய்தவடிகள்தாம்
இருந்தநல்லிமயத்து,
விலங்கல்போல்வனவிறலிருஞ்சினத்தன
வேழங்கள்துயர்க்கூர,
பிலங்கொள்வாளெயிற்றரியவைதிரி தரு
பிரிதிசென்றடைநெஞ்சே.

960 **துடிகொள்_நுண்ணிடைச்சுரிகுழல்** துளங்கெயிற்

றிளங்கொடிதிறத்து, ஆயர்

இடிகொள்வெங்குரலினவிடையடர்த்தவன்

இருந்தநல்லிமயத்து,

கடிகொள்வேங்கையின்நறுமலரமளியின்

மணியறைமிசைவேழம்,

பிடியினோடுவண்டிசைசொலத்துயில்கொளும்

பிரிதிசென்றடைநெஞ்சே.

961 **மறங்கொளாளரியுருவென**வெருவர

ஒருவனதகல்மார்வம்

திறந்து,வானவர்மணிமுடிபணிதர

இருந்தநல்லிமயத்துள்,

இறங்கியேனங்கள்வளைமருப்பிடந்திடக்

கிடந்தருகெரிவீசும்,

பிறங்குமாமணியருவியொடிழிதரு

பிரிதிசென்றடைனெஞ்சே.

962 **கரைசெய்மாக்கடல்கிடந்தவன்** கனைகழல்

அமரர்கள்தொழுதேத்த,

அரைசெய்மேகலையலர்மகளவளொடும்

அமர்ந்தநல்லிமயத்து,

வரைசெய்மாக்களிறீளவெதிர்வளர்முளை

அளைமிகுதேன்தோய்த்து,

பிரசவாரிதன்னிளம்பிடிக்கருள்செயும்

பிரிதிசென்றடைநெஞ்சே.

963 **பணங்களாயிரமுடைய**நல்லவரவணைப்

பள்ளிகொள் பரமாவென்று,

இணங்கிவானவர்மணிமுடிபணிதர

இருந்தநல்லிமயத்து,

மணங்கொள்மாதவிநெடுங்கொடிவிசும்புற

நிமிர்ந்தவைமுகில்பற்றி,

பிணங்குபூம்பொழில்நுழைந்துவண்டிசைசொலும்

பிரிதிசென்றடைநெஞ்சே.

964 கார்**கொள்வேங்கைகள்**கனவரைதழுவிய

கறிவளர்க்கொடிதுன்னி,

போர்கொள்வேங்கைகள்புனவரைதழுவிய

பூம்பொழிலிமயத்துள்,

ஏர்கொள்பூஞ்சுனைத்தடம்படிந் தினமலர்

எட்டுமிட்டிமையோர்கள்,

பேர்களாயிரம்பரவிநின்றடிதொழும்

பிரிதிசென்றடைநெஞ்சே.

965 **இரவுகூர்ந்திருள்**பெருகியவரைமுழை

இரும்பசியதுகூர,

அரவமாவிக்குமகன்பொழில்தழுவிய

அருவரையிமயத்து,

பரமனாதியெம்பனிமுகில்வண்ணனென்று

எண்ணிநின்றிமையோர்கள்,

பிரமனோடுசென்றடிதொழும்பெருந்தகைப்

பிரிதிசென்றடைநெஞ்சே.

966 **ஓதியாயிரநாமங்களு**ணர்ந்தவர்க்கு

உறுதுயரடையாமல்,

ஏதமின்றிநின்றருளும்நம்பெருந்தகை

இருந்தநல்லிமயத்து,

தாதுமல்கியபிண்டிவிண்டலர்கின்ற

தழல்புரையெழில்நோக்கி,

பேதைவண்டுகளெரியெனவெருவரு

பிரிதிசென்றடைநெஞ்சே.

967 **கரியமாமுகிற்படலங்கள்**கிடந்து

அவைமுழங்கிட,களிறென்று

பெரியமாசுணம்வரையெனப்பெயர்தரு

பிரிதியெம்பெருமானை,

வரிகொள்வண்டறைபைம்பொழில்மங்கையர்

கலியனதொலிமாலை,

அரியவின்னிசைபாடுநல்லடியவர்க்கு

அருவினையடயாவே.

**திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்**

*******

**திருவதரியாச்சிரமம்** என்றழைக்கப்படும் பத்ரிநாத் பெரியாழ்வாரின் தேவப்பிரயாகை என்ற கண்டமென்னும் கடிநகர் 11 பாசுரங்களில் 9வது பாசுரம் வதரியையும் குறிப்பிடுகிறது. **திருமங்கை** ஆழ்வாரால் 20 பாசுரங்களால் (பெரிய திருமொழி 1.3, 1.4 (968-987) மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

968 **முற்றமூத்துக்கோல்**துணையாமுன்னடிநோக்கி வளைந்து,
இற்றகால்போல்தள்ளிமெள்ள, இருந்தங்கிளையாமுன்,
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி, பெருமுலையூடு, உயிரை
வற்ற வாங்கியுண்ட வாயான் வதரி வணங்குதுமே.

969 **முதுகுபற்றிக்கைத்தலத்தால்**,முன்னொரு கோலூன்றிவிதிர்விதிர்த்துக்
கண்சுழன்று,மேற்கிளைகொண்டிருமி,
இதுவென்னப்பர் மூத்தவாறென்றுஇளையவர் ஏசா முன்,
மதுவுண்வண்டுபண்கள் பாடும் வதரிவணங்குதுமே.

970 **உறிகள்போல்மெய்ந்**நரம்பெழுந்துஊன் தளர்ந்துள்ளமெள்கி,
நெறியைநோக்கிக்கண்சுழன்று நின்றுநடுங்காமுன்,
அறிதியாகில்நெஞ்சம்அன்பா யாயிரநாமஞ்சொல்லி,
வெறிகொள்வண்டுபண்கள்பாடும் வதரிவணங்குதுமே.

971 **பீளைசோரக்கண்ணிடுங்கிப்** பித்தெழமூத்திருமி,
தாள்கள் நோவத்தம்மில்முட்டித் தள்ளிநடவாமுன்,
காளையாகிக்கன்று மேய்த்துக் குன்றெடுத்தன்று நின்றான்,
வாளைபாயும்தண்டடஞ்சூழ் வதரிவணங்குதுமே.

972 **பண்டுகாமரானவாறும்** பாவையர்வாயமுதம்
உண்டவாறும், வாழ்ந்தவாறும் ஒக்கவுரைத்திருமி,
தண்டுகாலாவூன்றியூன்றித்தள்ளிநடவாமுன்,
வண்டுபாடும்தண்டுழாயான் வதரிவணங்குதுமே.

973 **எய்த்தசொல்லோடீளை**யேங்கி இருமியிளைத் துடலம்,
பித்தர்ப்போலச்சித்தம் வேறாய்ப் பேசியயராமுன்,
அத்தனெந்தையாதி மூர்த்தி ஆழ்கடலைக்கடைந்த,
மைத்தசோதியெம்பெருமான் வதரிவணங்குதுமே.

974 **பப்பவப்பர்மூத்தவாறு** பாழ்ப்பதுசீத்திரளை

யொப்ப, ஐக்கள்போத வுந்தஉன்தமர்க்காண்மினென்று,
செப்புநேர்மென்கொங்கை நல்லார்
தாம்சிரியாதமுன்னம்,
வைப்பும்நங்கள்வாழ்வுமானான் வதரிவணங்குதுமே.
975 **ஈசிபோமினீங்கிரேன்மின்** இருமியிளைத்தீர்,
உள்ளம்
கூசியிட்டீரென்று பேசும் குவளையங்கண்ணியர்ப்பால்,
நாசமானபாசம் விட்டு நன்னெறிநோக்கலுறில்,
வாசம்மல்குதண்டு ழாயான் வதரிவணங்குதுமே.
976 **புலன்கள்நையமெய்யில்** மூத்துப்
போந்திருந்துள்ளமெள்கி,
கலங்கவைக்கள்போத வுந்திக் கண்டபிதற்றாமுன்,
அலங்கலாயதண்டு ழாய்கொண்டு ஆயிரநாமம்சொல்லி,
வலங்கொள்தொண்டர்ப்பாடி யாடும்
வதரிவணங்குதுமே.
977 **வண்டுதண்டேனுண்டு**வாழும் வதரிநெடுமாலை,
கண்டல்வேலிமங்கை வேந்தன் கலியனொலிமாலை,
கொண்டுதொண்டர்ப்பாடியாடக் கூடிடில்நீள்விசும்பில்,
அண்டமல்லால்மற்ற வர்க்கு ஓராட்சியறியோமே.
978 **ஏனமுனாகி**யிருநிலமிடந்து

அன்றிணையடியிமையவர்வணங்க,

தானவனாகம்தரணியில்புரளத்

தடஞ்சிலைகுனித்தவெந்தலைவன்,

தேனமர்சோலைக்கற்பகம்பயந்த

தெய்வநன்னறுமலர்க்கொணர்ந்து,

வானவர்வணங்கும்கங்கையின்கரைமேல்

வதரியாச்சிராமத்துள்ளானே.

979 **கானிடையுருவை**ச்சுடுசரம்துரந்து

கண்டுமுங்கொடுந்தொழிலுரவோன்,

ஊனுடையகலத்தடுகணைகுளிப்ப

உயிர்க்கவர்ந்துகந்தவெம்மொருவன்,

தேனுடைக்கமலத்தயனொடுதேவர்

சென்றுசென்றிறைஞ்சிட, பெருகு

வானிடைமுதுநீர்க்கங்கையிங்கரைமேல்

வதரியாச்சிராமத்துள்ளானே.

980 **இலங்கையும்**கடலுமடலருந்துப்பின்

இருநிதிக்கிறைவனும், அரக்கர்

குலங்களும்கெடமுன் கொடுந்தொழில்புரிந்த

கொற்றவன் கொழுஞ்சுடர்சுழன்ற,

விலங்கலிலுரிஞ்சிமேல்நின்றவிசும்பில்

வெண்துகிற்கொடியெனவிரிந்து,

வலந்தருமணிநீர்க்கங்கையின் கரைமேல்

வதரியாச்சிராமத்துள்ளானே.

981 **துணிவினியுனக்குச்**சொல்லுவன்மனமே.

தொழுதெழுதொண்டர்கள்தமக்கு,

பிணியொழித்தமரர்ப்பெருவிசும்பருளும்

பேரருளாளனெம்பெருமான்,

அணிமலர்க்குழலாரரம்பையர்துகிலும்

ஆரமும்வாரிவந்து, அணிநீர்

மணிகொழித்திழிந்த கங்கையின்கரைமேல்

வதரியாச்சிராமத்துள்ளானே.

982 **பேயிடைக்கிருந்து**வந்தமற்றவள்தன்

பெருமுலைசுவைத்திட, பெற்ற

தாயிடைக்கிருத்தலஞ்சுவனென்று

தளர்ந்திட வளர்ந்தவெந்தலைவன்,

சேய்முகட்டுச்சியண்டமுஞ்சுமந்த

செம்பொன்செய்விலங்கலிலிலங்கு,

வாய்முகட்டிழிந்தகங்கையின்கரைமேல்

வதரியாச்சிராமத்துள்ளானே.

983 **தேரணங்கல்குல்**செழுங்கையற்கண்ணி

திறத்து ஒருமறத்தொழில்புரிந்து,
பாரணங்கிமிலேறேழுமுன்னடர்த்த
பனிமுகில்வண்ணனெம்பெருமான்,
காரணந்தன்னால்கடும்புனல்கயத்த
கருவரைபிளவெழக்குத்தி,
வாரணங்கொணர்ந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே.
984 **வெந்திறல்களிறும்**வேலைவாயமுதும்
விண்ணொடுவிண்ணவர்க்கரசும்,
இந்திரற்கருளியெமக்குமீந்தருளும்
எந்தையெம்மடிகளெம்பெருமான்,
அந்தரத்தமரரடியிணைவணங்க
ஆயிரமுகத்தினாலருளி,
மந்தரத்திழிந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே.
985 **மான்முனிந்தொருகால்**வரிசிலைவளைத்த
மன்னவன்பொன்னிறத்துரவோன்,
ஊன்முனிந்தவனதுடலிருபிளவா
உகிர்நுதிமடுத்து, அயனரனைத்
தான்முனிந்திட்ட வெந்திறல்சாபம்

தவிர்த்தவன், தவம்புரிந்துயர்ந்த
மாமுனிகொணர்ந்தகங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே.
986 **கொண்டல்மாருதங்கள்**குலவரைதொகுநீர்க்
குரைகடலுலகுடனனைத்தும்,
உண்டமாவயிற்றோனொண் சுடரேய்ந்த
உம்பருமூழியுமானான்,
அண்டமூடறுத்தன்றந்தரத்திழிந்து
அங்கவனியாளலமர, பெருகு
மண்டுமாமணிநீர்க்கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே.
987 **வருந்திரைமணி**நீர்க்கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானை,
கருங்கடல்முந்நீர்வண்ணனையெண்ணிக்
கலியன்வாயொலிசெய்தபனுவல்,
வரஞ்செய்தவைந்துமைந்தும்வல்லார்கள்
வானவருலகுடன் மருவி,
இருங்கடலுலகமாண்டுவெண்குடைக்கீழ்
இமையவராகுவர்தாமே.

**திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்**

*******

**ஶ்ரீபதரீநாதாஷ்டகம்**

பூவைகுண்டக்ருதம் வாஸம் தேவதேவம் ஜகத்பதிம்।

சதுர்வர்கப்ரதாதாரம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 1

தாபத்ரயஹரம் ஸாக்ஷாத் ஸாந்தி-புஷ்டி-பலப்ரதம்।

பரமாநந்ததாதாரம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 2॥

ஸத்ய: பாபக்ஷயகரம் ஸத்ய: கைவல்ய-தா³யகம்।

லோகத்ரய-விதாதாரம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 3॥

ப⁴க்த-வாஞ்சாகல்பதரும் கருணாரஸ-விக்ரஹம்।

பவாப்திபாரகர்தாரம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 4॥

ஸர்வதேவஸ்துதம் ஸஸ்வத் ஸர்வ-தீர்தாஸ்பதம் விபும்।

லீலயோபாத்த-வபுஷம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 5॥

அநாதிநிதநம் காலகாலம் பீமயமச்யுதம்।

ஸர்வாஸ்சர்யமயம்தேவம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம்॥ 6॥

கந்தமாதநகூடஸ்தம் நர-நாராயணாத்மகம்।

பதரீகண்டமத்யஸ்தம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 7॥

ஸத்ரூதாஸீந மித்ராணாம் ஸர்வஜ்ஞம் ஸமதர்ஸநம்।

ப்ரஹ்மாநந்த சிதாபாஸம் ஶ்ரீபதரீஸம் நமாம்யஹம் ॥ 8॥

ஶ்ரீபத்ரீஸாஷ்டகமிதம் ய: படேத் ப்ரயத: ஸுசி:।

ஸர்வ பாப விநிர்முக்த: ஸ ஸாந்திம் லபதே பராம் ॥ 9॥

*******

**ஸ்ரீ நாம ராமாயணம்**

**பால காண்டம்**

1. சுத்த ப்ரஹ்ம பராத்பர ராம்

2. காலாத்மக பரமேச்வர ராம்

சுத்த ப்ரஹ்ம பராத்பர ராம், காலாத்மக பரமேச்வர ராம்

3. சேஷதல்ப ஸுகநித்ரித ராம்

4. ப்ரஹ்மா த்யமர ப்ரார்த தித ராம்

5. சண்டகிரணகுல மண்டந ராம்

6. ஸ்ரீ மத் தசரத நந்தன ராம்

7. கௌசல்யா ஸுகவர்த்த்ந ராம்

8. விச்வாமித்ர ப்ரியதன ராம்

9. கோர தாடகா காதக ராம்

10. மாரீ சாதி நிபாதக ராம்

11. கௌசிக மக ஸம்ரக்ஷக ராம்

12. ஸ்ரீ மத ஹல்யோத்தாரக ராம்

13. கௌதம முனி ஸம்பூஜித ராம்

14. ஸுரமுனி வரகண ஸம்ஸ்துத ராம்

15. நாவிகதாவித ம்ருதுபத ராம்

16. மிதிலாபுரஜன மோஹக ராம்

17. விதேஹ மானஸ ரஞ்ஜக ராம்

18. த்ரியம்பக கார்முக பஞ்ஜக ராம்

19. ஸீதார்ப்பித வரமாலிக ராம்

20. க்ருத வைவாஹிக கௌதுக ராம்

21. பார்க்கவ தர்ப்ப விநாசக ராம்

22. ஸ்ரீ மதயோத்யா பாலக ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

**அயோத்யா காண்டம்**

23. அகணித குணகண பூஷித ராம்

24. அவநீத நயா காமித ராம்

அகணித குணகண பூஷித ராம், அவநீத நயா காமித ராம்

25. ராகாசந்த்ர ஸமாநந ராம்

26. பித்ரு வாக்கியாச்ரித காநந ராம்

27. ப்ரியகுஹ விநிவேதித பத ராம்

28. தத்ஷாவித நிஜ ம்ருதுபத ராம்

29. பரத்வாஜமுகா நந்தக ராம்

30. சித்ரகூடாத்ரி நிகேத ந ராம்

31. தசரத ஸந்தத சிந்தித ராம்

32. கைகேயி தநயார்த்தித ராம்

33. விரசித நிஜ பித்ருகர்மக ராம்

34. பரதார்ப்பித நிஜ பாதுசு ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

**ஆரண்ய காண்டம்**

35. தண்டகாவந ஜந பாவன ராம்

36. துஷ்ட விராத விநாசன ராம்

தண்டகாவந ஜந பாவன ராம், துஷ்ட விராத விநாசன ராம்

37. சரபங்க ஸுதீஷ்ண அர்ச்சித ராம்

38. அகஸ்த்யா நுக்ரஹ வர்த்தித ராம்

39. க்ருத்ராதிப ஸம்ஸேவித ராம்

40. பஞ்சவடி தடஸுஸ்த்தித ராம்

41. சூர்ப்பணகார்த்தி விதாயக ராம்

42. கரதூக்ஷணமுக ஸூதக ராம்

43. ஸீதா ப்ரிய ஹரிணாநுக ராம்

44. மாரி சார்த்தி க்ருதாசுக ராம்

45. விநஷ்ட ஸீதாந்வேஷக ராம்

46. க்ருத்ராதிப கதி தாயக ரா

47. சபரீ தத்த பலாசந ராம்

48. கபந்த பாஹுச் சேதந ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

**கிஷ்கிந்தா காண்டம்**

49. ஹநுமத் ஸேவித நிஜபத ராம்

50. நத ஸுக்ரீ வாபீஷ்டத ராம்

ஹநுமத் ஸேவித நிஜபத ராம், நத ஸுக்ரீ வாபீஷ்டத ராம்

51. கர்வித வாலி ஸம்ஹாரக ராம்

52. வாநர தூத ப்ரேஷக ராம்

53. ஹிதகர லக்ஷ்மண ஸம்யுத ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

**ஸுந்தர காண்டம்**

54. கபிவர ஸ்ந்தத ஸம்ஸ்ம்ருத ராம்

55. தத்கதி விக்ந த்வம்ஸக ராம்

கபிவர ஸ்ந்தத ஸம்ஸ்ம்ருத ராம், தத்கதி விக்ந த்வம்ஸக ராம்

56. ஸீதா ப்ராணா தாரக ராம்

57. துஷ்ட தசா நந தூஷித ராம்

58. சிஷ்ட ஹநூமத் பூஷித ராம்

59. ஸீதா வேதித காகாவந ராம்

60. க்ருத சூடாமணி தர்சந ராம்

61. கபிவர வசனா ச்வாஸித ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

**யுத்த காண்டம்**

62. ராவண நிதந ப்ரஸ்தித ராம்

63. வா நர ஸைந்ய ஸமாவ்ருத ராம்

ராவண நிதந ப்ரஸ்தித ராம், வா நர ஸைந்ய ஸமாவ்ருத ராம்

64. சோஷித ஸரி தீசார்த்தித ராம்

65. விபீஷணாபய தாயக ராம்

66. பர்வத ஸேது நிபந்தக ராம்

67. கும்பகர்ண சிரச்சேத ராம்

68. ராக்ஷஸ ஸங்க விமர்த்தக ராம்

69. அஹிமஹி ராவண சாரண ராம்

70. ஸம்ஹ்ருத தசமுக ராவண ராம்

71. விதிபவ முகஸுர ஸம்ஸ்துத ராம்

72. கஸ்தித தசரத வீக்ஷித ராம்

73. ஸீதா தர்சன மோதித ராம்

74. அபிஷிக்த விபீஸிணநத ராம்

75. புஷ்பக யாநா ரோஹண ராம்

76. பரத்வாஜாபிநிஷேவண ராம்

77. பரதப்ராண ப்ரியகர ராம்

78. ஸாகேதபுரீ பூஷண ராம்

79. ஸகல ஸ்வீய ஸமாநத ராம்

80. ரத்ந லஸத் பீடாஸ்தித ராம்

81. பட்டாபிஷேக லங்க்ருத ராம்

82. பார்த்திவ குல ஸம்மாநித ராம்

83. விபிஷணார்ப்பித ரங்கக ராம்

84. கீசகுலா நுகர்ஹகர ராம்

85. ஸகலஜீவ ஸம்ரக்ஷக ராம்

86. ஸமஸ்த லோகா தாரக ராம்

ஸகலஜீவ ஸம்ரக்ஷக ராம், ஸமஸ்த லோகா தாரக ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

**உத்தர காண்டம்**

87. ஆகத முநிகண ஸம்ஸ்துத ராம்

88. விச்ருத தசகண்டோத்பவ ராம்

ஆகத முநிகண ஸம்ஸ்துத ராம், விச்ருத

தசகண்டோத்பவ ராம்

89. ஸீதாலிங்கன நிர்வ்ருத ராம்

90. நீதிஸுரக்ஷித ஜநபத ராம்

91. விபிந த்யாஜித ஜநகஜ ராம்

92. காரித லவணாஸுரவத ராம்

93. ஸ்வர்க்கத சம்புக ஸம்ஸ்துத ராம்

94. ஸ்வதநய குசலவ நந்தித ராம்

95. அச்வமேத க்ரது தீக்ஷித ராம்

96. காலாவேதித ஸுரபத ராம்

97. ஆயோத்யகஜந முக்தித ராம்

98. விதமுக விபுதா நந்தக ராம்

99. தேஜோமய நிஜரூபக ராம்

100. ஸம்ஸ்ருதி பந்த விமோசக ராம்

101. தர்ம ஸ்தாபந தத்பர ராம்

102. பக்தி பாராயண முக்தித ராம்

103. ஸர்வ சராசர பாலக ராம்

104. ஸர்வ பவாமயவாரக ராம்

105. வைகுண்டாலய ஸம்ஸ்த்தித ராம்

106. நித்யாநந்த பதஸ்தித ராம்

. வைகுண்டாலய ஸம்ஸ்த்தித ராம், நித்யாநந்த பதஸ்தித ராம் 107. ராம ராம ஜய ராஜா ராம் 108. ராம ராம ஜய ஸீதா ராம்.

பயஹர மங்கள தசரத ராம்

ஜய ஜய மங்கள சீதாராம்

மங்கள கர ஜய மங்கள ராம்

ஸங்கத சுப விபோயதய ராம்

ஆனந்தாம்ருத வர்ஷக ராம்

ஆச்ரித வத்ஸல ஜய ஜய ராம்

ரகுபதி ராகவ ராஜாராம்

பதித பாவன ஸீதாராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

*******

**ஶ்ரீ ராம த்யான ஸ்தோத்ரம்**

ஆபதாம் அபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்|

லோகாபிராம்ம் ஶ்ரீராம்ம் பூயோ பூயோ நமாம்யஹம் ||

ஆர்த்தாநாம் ஆர்த்தி ஹந்தாரம் பீதனாம்பீதி நாச'னம் |

த்விஷதாம் காலதண்டம் தம் ராம்சந்த்ரம் நமாம்யஹம்
||
நம: கோதண்ட ஹஸ்தாய ஸந்தீக்ருத ச’ராய ச |
கண்டிதாகில தைத்யாய ராமாயா ‘பந்நிவாரிணே ||
ராமாய ராம்பத்ராய ராம்சந்த்ராய வேதஸே |
ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம: ||
அக்ரதஃ ப்ருஷ்டதச்’ சைவ பார்ச்’வதச்’ச மஹாபலௌ
|
ஆகர்ணபூர்ண தன்வாநௌ ரக்ஷேதாம்
ராம்லக்ஷ்மணௌ ||
ஸன்னத்த: கவச: கட்கீ சாப பாணதரோ யுவா |
கச்சன் மமாக்ரதோ நித்யம் ராம்: பாதுஸலக்ஷ்மண: ||
அச்யுதாநந்த கோவிந்த நாமோச்சாரண பேஷஜாத் |
நச்’யந்தி ஸகலாரோகா: ஸத்யம் ஸத்யம்
வதாம்யஹம் ||
ஸத்யம் ஸத்யம் புனஸ் ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே
|
வேதாச்’சா’ஸ்த்ராத் பரம்நாஸ்தி நதைவம் கேச’
வாத்பரம் ||

ச’ரீரே ஜர்ஜரிபூதே வ்யாதிக்ரஸ்தே களேபரே |

ஔஷதம் ஜாந்ஹவீ தோயம் வைத்யோ நாராயணோ ஹரி: ||

ஆலோட்ய ஸர்வசா’ஸ்த்ராணி விசார்ய ச புன: புன: |

இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணோ ஹரி: ||

காயேந வாசா மநஸா இந்த்ரியைர்வா புத்யாத்மநா வா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் |

கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி ||

யதக்ஷர பதப்ரஷ்டம் மாத்ராஹீனம்து யத்பவேத் |

தத்ஸர்வம் க்ஷம்யதாம் தேவ நாராயண நமோஸ்துதே ||

விஸர்க்க பிந்து மாத்ராணி பதபாதாக்ஷராணி ச |

ந்யூநாநி ச அதிரிக்தாநி க்ஷமஸ்வ புருஷோத்தம ||

**********

**ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமத்திலிருந்து**

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே

சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே

ஶ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே

சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே

ஶ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே

சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே

ஶ்ரீ ராம நாம வரானன ஓம் நம இதி

**********

ஸுந்தரே ஸுந்தரோ ராம:

ஸுந்தரே ஸுந்தரி கதா

ஸுந்தரே ஸுந்தரி ஸீதா

ஸுந்தரே ஸுந்தரம் வநம்

ஸுந்தரே ஸுந்தரம் காவ்யம்

ஸுந்தரே ஸுந்தரோ கபி:

ஸுந்தரே ஸுந்தரம் மந்த்ரம்

ஸுந்தரே கிம் ந ஸுந்தரம்

********

**ஶ்ரீ ராமர் துதி**

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே தின்மையும்

பாவமும் சிதைந்து தேயுமே சென்மமும் மரணமும்

இன்றித் தீருமே இம்மையே இராம் என்றிரண்டே

ழுத்தினால்.

நாடிய பொருள்கை <u>கூடும்</u> ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை சூடிய
சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை
முற்றும் தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும்
பதத்தைத் தாமே இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்துமாம் இராம்ன் என்னும் செம்மைசேர் நாமம்
தன்னைக் கண்களில் தெரியக் கண்டார்.

********

## ஸ்ரீராம நாம மஹிமை

ராம நாமம் ஒருமருந்து
ராம நாமம் அரு மருந்து
ஒரே ஒரு மருந்து ஒரு மருந்து
உலகத்தை உய்விக்க வந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

சொல்லின் செல்வன் ஆஞ்சநேயன் தின்னும் மருந்து
சொல்லச் சொல்ல தித்திக்கும் அந்த மருந்து

அஞ்சனா பாக்கியம் என்னும் மருந்து

ஆர்வத்துடன் அசை போட்டு தின்னும் மருந்து

ராம ராம ராம ராம ராம ராம ராம்

ராம ராம ராம சீதா ராம ராம ராம்

தாரக மந்த்ரம் அந்த மருந்து

தாபம் மூன்றும் போக்கடிக்கும் அந்த மருந்து

தின்னத் தின்னத் திகட்டாது அந்த மருந்து

தேவர்களுக்கும் கிட்டாது அந்த மருந்து

ராம ராம ராம ராம ராம ராம ராம்

ராம ராம ராம சீதா ராம ராம ராம்

ஜானகிக்கு ஜீவன் தந்தது அந்த மருந்து

ஜாதி மத பேதமின்றி சொல்லும் மருந்து

மாருதிக்கு பெருமை தந்தது அந்த மருந்து

மாதேவன் பாராட்டிப் பேசும் மருந்து

ராம ராம ராம ராம ராம ராம ராம்

ராம ராம ராம சீதா ராம ராம ராம்

மங்காத செல்வம் தரும் அந்த மருந்து

மாயப் பிறப்பறுக்கும் அந்த மருந்து

பாமரர்க்கும் பண்டிதர்க்கும் ஒரே மருந்து
பாரபட்சமின்றி பலன் தரும் அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

துறவிகளும் யோகிகளும் தின்னும் மருந்து
துளசிதாசன் தேடித் தேடிக் கண்ட மருந்து
ஐந்தும் எட்டும் கூட்டிச் சேர்த்தது அந்த மருந்து
ஐந்து வித பாவங்களை போக்கும் அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

வைதேஹிக்கு வாழ்வளித்தது அந்த மருந்து
வையகத்தை வாழவைக்க வந்த மருந்து
இல்லறத்தில் வாழ்வு தரும் அந்த மருந்து
இறுதியிலே வீடு தரும் அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

பலவித நன்மைகளைத் தந்த மருந்து
பக்தர்களை பாடி ஆட வைத்த மருந்து
பலவித பயங்களைப் போக்கும் மருந்து

கேட்கக் கேட்கத் தெவிட்டாத ராம நாம மருந்து

ராம ராம ராம ராம ராம ராம ராம்

ராம ராம ராம சீதா ராம ராம ராம்

********

**திவ்ய பிரபந்த பாசுர ராமாயணம். -** நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலிருந்து சொற்றொடர்களைத் தொகுத்து பெரியவாச்சான் பிள்ளை இயற்றியது.

**பால காண்டம்**

திரு மடந்தை, மண் மடந்தை இரு பாலும் திகழ,
நலம் அந்தம் இல்லது ஓர் நாட்டில்,
அந்தமில் பேரின்பத்து அடியரொடு,
ஏழ் உலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்,
அயர்வரும் அமரர்கள் அதிபதியான,
அணியார் பொழில் சூழ் அரங்க நகர் அப்பன்,
அலை நீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல்,
ஆவார் ஆர் துணை என்று துளங்கும்,
நல் அமரர் துயர் தீர,
வல்லரக்கர் வாழ் இலங்கை பாழ் படுக்க எண்ணி,
மண் உலகத்தோர் உய்ய,
அயோத்தி எனும் அணி நகரத்து,

வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்,

கௌசலை தன் குல மதலையாய்,

தயரதன் தன் மகனாய்த் தோன்றி,

குணம் திகழ் கொண்டலாய்,

மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காக்க நடந்து வந்து,

தனை எதிர்த்த தாடகை தன் உரம் கீண்டு,

வல்லரக்கர் உயிர் உண்டு

கல்லைப் பெண்ணாக்கி,

காரார் திண் சிலை இருத்து,

மைதிலியை மணம் புணர்ந்து,

இருபத்து ஒரு கால் அரசு களை கட்ட,

மழுவாளி வெவ்வரி நல் சிலை வாங்கி வென்றி கொண்டு,

அவன் தவத்தை முற்றும் செற்று,

அம்பொன் நெடு மணி மாட அயோத்தி எய்தி,

அரியணை மேல் மன்னன் ஆவான் நிற்க,

**அயோத்யா காண்டம்**

கொங்கைவன் கூனி சொல் கொண்ட

கொடிய கைகேயி வரம் வேண்ட,

அக்கடிய சொல் கேட்டு

மலக்கிய மாமனத்தனனாய் மன்னவனும் மறாதொழிய

‘குலக்குமரா காடுறையப்போ’ என்று விடை கொடுப்ப,

இந்நிலத்தை வேண்டாது

ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து,

மைவாய களிறொழிந்து மா ஒழிந்து தேரொழிந்து,

கலன் அணியாதே காமர் எழில் விழல் உடுத்து

அங்கங்கள் அழகு மாறி

மானமரும் மென் நோக்கி வைதேவியின் துணையா

இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு பின் செல்ல,

கலையும் கரியும் பரிமாவும் திரியும் கானம் கடந்து

போய்,

பக்தி உடைக் குகன்கடத்த கங்கை தன்னைக் கடந்து

வனம் போய்ப் புக்கு காயோடு நீடு கனி உண்டு

வியன் கான மரத்தின் நீழல்

கல் அணைமேல் கண் துயின்று

சித்திர கூடத்து இருப்ப, தயரதன் தான்

‘நின் மகன் மேல் பழி விளைத்திட்டு என் பெற்றாய்

கைகேசி?

நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்’

என்று வான் ஏற,

தேனமரும் பொழில் சாரல் சித்திர கூடத்து

ஆனை புரவி தேரோடு காலாள்

அணி கொண்ட சேனை சுமந்திரன்

வசிட்டருடன் பரத நம்பி பணிய

தம்பிக்கு மரவடியை வான்பணயம் வைத்துக் குவலயத்

துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்

எங்கும் பரதற்கு அருளி விடை கொடுத்து

திருவுடைய திசைக்கருமம் திருத்தப்போய்

தண்டகாரண்யம் புகுந்து

**ஆரண்ய காண்டம்**

மறை முனிவருக்கு ‘அஞ்சேல்மின்!’ என்று விடை

கொடுத்து

வெங்கண் விறல் விராதன் உக வில் குனித்து

வண்டமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கி

புலர்த்தெழுந்த காமத்தால் சீதைக்கு நேர் ஆவன் என்ன,

பொன்னிறம் கொண்ட சுடு சினத்த சூர்ப்பணகாவைக்

கொடி மூக்கும் காதிரண்டும்

கூரார்ந்த வாளால் ஈரா விடுத்து,

கரனோடு தூடணன் தன் உயிரை வாங்க,

அவள் கதறித் தலையில் அங்கை வைத்து
மலை இலங்கை ஓடிப்புக,
கொடுமையின் கடுவிசை அரக்கன்
அலைமலி வேற்கண்ணாளை அகல்விப்பான்
ஒருருவாய மானை அமைத்து சிற்றெயிற்று
முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து
இலைக்குரம்பில் தனி இருப்பில்
கனிவாய்த் திருவினைப் பிரித்து
நீள்கடல் சூழ் இலங்கையில்
அரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொடுபோய்
வம்பு உலாம் கடிகாவில் சிறையாய் வைக்க
அயோத்தியர் கோன் மாயமான் மாயச் செற்று
அலைமலி வேற் கண்ணாளை அகன்று தளர்வெய்தி
சடாயுவை வைகுந்தத்தேற்றிக்
கங்குலும் பகலும் கண்துயில் இன்றி
கானகம் படி உலாவி உலாவி
கணை ஒன்றினால் கவந்தனை மடித்து
சபரி தந்த கனி உவந்து

**கிஷ்கிந்தா காண்டம்**

வனமருவு கவியரசன் தன்னோடு காதல் கொண்டு

மராம்ரம் ஏழ் எய்தி

உருத்து எழு வாலி மார்பில்

ஒரு கணை உருவ ஓட்டிக்

கருத்துடைத் தம்பிக்கு

இன்பக் கதிர் முடி அரசளித்து

வானரக்கோனுடனிருந்து வைதேகி தனைத் தேட

விடுத்த திசைகருமம் திருத்து,

திறல் விளங்கு மாருதியும்

மாயோன் தூதுரைத்தல் செப்ப!

**சுந்தரகாண்டம்**

சீராரும் திறலனுமன் மாகடலைக் கடந்தேறி

மும்மதில் நீள் இலங்கை புக்குக் கடிகாவில்

வாராருமுலை மடவாள் வைதேவி தனைக்கண்டு

'நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்!

அயோத்திதனில் ஓர் இடவகையில்

எல்லியம் போதினிதிருத்தல்

மல்லிகைமாமலை கொண்டாங்கார்த்ததும்

கலக்கிய மாமனத்தினளாய்க் கைகேயி வரம் வேண்ட

மலக்கிய மாமனத்தவனாய் மன்னவனும் மறாதொழிய

குலக்குமரா காடுறையப்போ என்று விடைகொடுப்ப

இலக்குமணன் தன்னோடங்கேகியதும்

கங்கை தன்னில்

கூரணிந்த வேல்வலவன் குகனோடு

சீரணிந்த தோழமை கொண்டதுவும்,

சித்திரகூடத்திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும்,

சிறுகாக்கை முலைதீண்ட மூவுலகும் திரிந்தோடி

வித்தகனே ராமா ஓ நின்னபயம்

என்ன அத்திரமே அவன் கண்ணை அறுத்ததுவும்

பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட

நின்னன்பின் வழி நின்று சிலைபிடித்து எம்பிரான் ஏக

பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்

அயோத்தியர்கோன் உரைத்த அடையாளம்

ஈதவன் கை மோதிரமே என்றடையாளம்

தெரிந்துரைக்க

மலர்க்குழலாள் சீதையும்

வில்லிறுத்தான் மோதிரம் கண்டு

அனுமன் அடையாளம் ஒக்கும் என்று

உச்சிமேல் வைத்துகக்க

திறல் விளங்கு மாருதியும்

இலங்கையர்கோன் மாக்கடிகாவையிறுத்து

காதல் மக்களும் சுற்றமும் கொன்று
கடி இலங்கை மலங்க எரித்து
அரக்கர்கோன் சினமழித்து மீண்டு
அன்பினால் அயோத்தியர்கோன்
தளிர்புரையும் அடியிணை பணிய

**யுத்தகாண்டம்**

கானஎண்கும் குரங்கும் முசுவும்
படையாக் கொடியோன் இலங்கை புகலுற்று
அலையார் கடற்கரை வீற்றிருந்து
செல்வ விபீடணர்க்கு நல்லனாய்
விரிநீர் இலங்கை அருளி,
சரண்புக்க குரை கடலை அடலம்பால் மறுக எய்து
கொல்லைவிலங்கு பணிசெய்ய
மலையால் அணைகட்டி மறுகரை ஏறி
இலங்கை பொடியாக,
சிலைமலி செஞ்சரங்கள் செல உய்த்துக்
கும்பனொடு நிகும்பனும் பட
இந்திரசித்தழியக் கும்பகர்ணன் பட
அரக்கர் ஆவி மாள, அரக்கர்
கூத்தர் போலக் குழமணி தூரமாட

இலங்கை மன்னன் முடி ஒருபதும்
தோள் இருபதும் போயுதிர,
சிலைவளைத்து சரமழை பொழிந்து
கரந்துணித்து வென்றி கொண்ட செருக்களத்துக்
கடிக்கமல நான்முகனும், கண்மூன்றத்தானும்
எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்
மற்றுமுள்ள வானவர் மலர்மழை பொழிந்து
மணிமுடி பணிதர அடி இணை வணங்க
கோலத்திருமாமகளொடு
செல்வவீ டணன் வானரக்கோனுடன்
இலகுமணி நெடுந்தேர் ஏறி, சீரணிந்த குகனோடு கூடி
அங்கண் நெடுமதில் புடை சூழ் அயோத்தி எய்தி,
நன்னீராடிப் பொங்கிளவாடை யரையில் சாத்தித்
திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்
முதலா மேதகு பல்கலனணிந்து
சூட்டு நன்மாலைகளணிந்து
பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமணனும் இரவும் நண்பகலும் ஆட்செய்ய
வடிவிணை இல்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை
மலர்க்குழலாள் சீதையும் தானும்

கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ஏழுலகும்

தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்.

**ஸ்ரீராம்ஜெயம்**

********

**எளிய தமிழில் சுந்தர காண்ட பாராயணம்:**

சுந்தர காண்டம் என்று பெயர் சொல்லுவார்,
சுகம் தரும் சொர்க்கம் என்று கருத்தில் கொள்வார்,
கண்டேன் சீதையை என்று காகுத்தனிடம் சொன்ன,
கருணை மிகு ராமபக்தன் ஆஞ்சநேயர் பெருமை இது.

அஞ்சனை தனையன் அலைகடல் தாண்டவே,
ஆயத்தமாகி நின்றார் ராம பாணம் போல்,
ராசஷஸர் மனைநோக்கி ராஜ கம்பீரத்தோடு,
ராமதூதனும் விரைந்தே சென்றார்.

அங்கதனும் ஜாம்பவானும் அனைத்து வானரங்களும்,
அன்புடன் விடை கொடுத்து வழியனுப்பினரே!
வானவர்கள் தானவர்கள் வருணாதி தேவர்கள்,
வழியெல்லாம் நின்று பூமாரி பொழிந்தனரே!

மைநாக பர்வதம் மாருதியை உபசரிக்க,

மகிழ்வுடன் மாருதியும் மைநாகத்தை திருப்தி செய்து,
ஸுரசையை வெற்றி கொண்டு ஸிம்ஹிகையை வதம் செய்து,
சந்தோஷமாய் சமுத்திரத்தை தாண்டியே இலங்கை சேர்ந்தார்.

இடக்காகப் பேசிய இலங்கையின் தேவதையை,
இடக்கையால் தண்டித்தவன் இதயத்தைக் கவர்கின்றார்,
அழகான இலங்கையில் அன்னை ஜானகியை,
அங்குமிங்கும் தேடியே அசோகவனத்தில் கண்டார்.

சிம்சுபா மரத்தடியில் ஸ்ரீராமனைத் தியானம் செய்யும்,
சீதாப்பிராட்டியைக் கண்டு சித்தம் கலங்கினார்,
ராவணன் வெகுண்டிட ராசஷஸியர் கலங்கிட,
வைதேகி மகிழ்ந்திட வந்தார் துயர்துடைக்க.

கணையாழியைக் கொடுத்து ஜயராமன் சரிதம் சொல்லி,
சூடாமணியைப் பெற்ற சுந்தர ஆஞ்சநேயர்,
அன்னையின் கண்ணீர் கண்டு அரக்கன் மேல் கோபம் கொண்டு,
அசோகவனம் அழித்து அனைவரையும் ஒழித்தார்.

பிரம்மாஸ்திரத்தினால் பிணைத்திட்ட ஆஞ்சநேயர்,
பட்டாபிராமன் தன் பெருமையை எடுத்துரைக்க,
வெகுண்ட இலங்கை வேந்தன் வையுங்கள் தீ வாலுக்கென்றான்,
வைத்த நெருப்பினால் வெந்ததே இலங்கை நகர்.

அரக்கனின் அகந்தையை அழித்திட்ட அனுமனும்,
அன்னை ஜானகியிடம் அனுமதி பெற்றுக் கொண்டார்,
ஆகாய மார்க்கத்தில் ஆஞ்சநேயர் தாவி வந்தார்,
அன்னையைக் கண்டுவிட்ட ஆனந்தத்தில் மெய்மறந்தார்.

ஆறாத சோகத்தில் ஆழ்ந்திருந்த ராமனிடம்,
கைகூப்பிக் 'கண்டேன் சீதையை' என்றார்,
வைதேஹி வாய்மொழியை அடையாளமாகக் கூறி
சொல்லின் செல்வன் ஆஞ்சநேயர் சூடாமணி அளித்தார்.

மனம் கனிந்த மாருதியை மார்போடணைத்த ராமர்,
மைதிலியை சிறைமீட்க மறுகணம் சித்தமானார்,
ஆழ்கடலில் அற்புதமாய் அணைகட்டிப் படைகள் சூழ,

அனுமனும் இலக்குவனும் உடன்வரப் புறப்பட்டார்.

அழித்திட்டார் ராவணனை, ஒழித்திட்டார் அதர்மத்தை,
அன்னை சீதாதேவியை சிறைமீட்டு அடைந்திட்டார்,
அயோத்தி சென்று ராமர் ஜகம் புகழ் ஆட்சி செய்தார்,
அவனைச் சரணடைந்தோர்க்கு அவர் அருள் என்றும்
உண்டு.

எங்கெங்கு ரகுராமன் கீர்த்தனமோ அங்கெல்லாம் கரம்
குவித்து,
மனம் உருகி கண்களில் நீர் சொரிந்து, ஆனந்தத்தில்
மூழ்கி,
கேட்கும் பரிபூரண பக்தனே ஸ்ரீ ஆஞ்சநேயா -
உன்னைப்
பணிகின்றோம், பன்முறை உன்னைப் பணிகின்றோம்.

********

## திருக்கண்டமென்னும் கடிநகர் (தேவப்ராயாகை)

பெரியாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம் ரிஷி கேசத்திலிருந்து பத்திரிநாத் செல்லும் வழியில் 45வது மைலில் கடல் மட்டத்திலிருந்து 1700 அடி உயரத்தில் அமைந்துள்ளது. பத்ரியிலிருந்து சுமார் 60 மைல் தூரமாகும்.

இவ்விடத்திற்கு தேவப்ராயகை என்றும் பெயர். மிகச் சிறந்த யாகத்தை பிரம்மன் இங்கு துவங்கியதால் இவ்விடத்திற்கு ப்ராயாகை என்னும் பெயராயிற்று. ஸ்ரீமந் நாராயணனையே தேவனாக கருதி இவ்விடத்தில் யாகம் செய்யப்பட்டதால் தேவப்ராயாகை என்றாயிற்று என்றும் சொல்வர். தேவலோகத்திற்குச் சமானமான சக்தி இவ்விடத்தில் பரவியிருப்பதால் தேவப்ராயாகை ஆயிற்றென்றும் சொல்வர்.

ப்ரயாகைக்கு கிழக்கே உள்ளே பிரதிஷ்டானம் என்ற இடத்தில் உள்ள தீர்த்தக் கிணறு. வடக்கேயுள்ள வாசுகி என்ற இடம், மேற்கே காம்ப்ளாஸ் என்னும் சர்ப்பங்கள் உள்ள இடம். தெற்கு திசையில் உள்ள பஹூ மூலம் என்னும் பகுதி ஆகியன ப்ரயாகையின் எல்லைகளாகும்.

இந்த தேவப்ரயாகையின் சிறப்பை பற்றி பாத்ம, மத்ஸய, கூர்ம அக்னி புராணங்கள் பகர்கின்றன. கங்கையும், யமுனையும் கூடும் இடமே ப்ரயாகை. மிக ரஹஸ்யமான தீர்த்தமிது. விதிப்படி இங்கே வசித்துக் கர்மாக்களைச் செய்தால் முற்பிறவியில் எங்கிருந்தோம் எப்படி இருந்தோம் என்ற ஞானத்தை நமக்கு தரும் என்று கூர்ம புராணம் கூறுகிறது. விதிக்கப்பட்டுள்ள முறைகளின்படி தூய்மையான மனத்துடன் யாகம் செய்பவர்கள் நற்கதி (மோட்சம்) அடைகின்றனர். என்றும், இங்கே உயிர்விடுபவர்கள் மோட்சம் பெறுகின்றனர் என்றும் ரிக்வேதம் பகர்கிறது.

இங்குள்ள ஆலமரம் தான் ப்ரளய காலத்தில் அழியாமல் இருக்குமென்றும் அதனிலையில்தான் பெருமாள் குழந்தையாக பள்ளிகொள்வார் என்றும் மாத்ஸய புராணம் கூறுகிறது.

மூலவர் - நீலமேகப் பெருமாள் (புருஷோத்தமன்) கிழக்கு நோக்கி நின்ற

திருக்கோலம். இப்பெருமாளுக்கும், பிராட்டிக்கும் வேணி மாதவன், விமலா என்ற பெயரை வடநாட்டு நூல்கள் சூட்டி மகிழ்கின்றன.

தாயார் - புண்டரீக வல்லி

தீர்த்தம் - மங்கள தீர்த்தம், கங்கை நதி ப்ரயாகை

விமானம் - மங்கள விமானம்

சிறப்புக்கள்

1. பாண்டவர்கள் எதிரிகளைக் கொன்றாலும் அவர்கள் சகோதரர்கள் அல்லவா, சகோதரர்களைக் கொன்ற பாவத்தைப் போக்க ப்ரயாகையில் நீராடினால் போதும், ப்ரயாகை சகல பாவத்தையும் போக்கிவிடுமென மார்க்கண்டேயர் கூற, பாண்டவர்கள் அவ்விதமே செய்தனர் என்பது வரலாறு.

2. பிரம்மா, இவ்விடத்தில் செய்தயாகத்திற்குப் பின்பே தனது படைக்கும் தொழில் சக்தியை அதிகரித்துக் கொண்டாராம்.

3. பரத்வாஜர் இங்கு யாகம் செய்தே, சப்தரிஷிகளுள் ஒருவராக ஆனார்.

4. ப்ரயாகை யாத்திரை செய்வதாக நிச்சயித்தவுடன் நம் உடம்பில் இருக்கும் பாவங்கள் எல்லாம் நடுங்குகின்றன.

5. இவ்விடத்தில் செய்யும் அன்னதானம் மிகவும் சக்தி வாய்ந்தது. இதற்கொரு கதை உண்டு. சுவேத கேது என்னும் மன்னன் எண்ணற்ற தர்மங்கள் செய்தும் அன்னதானம் மட்டும் செய்யாதிருந்தான். அதன் மகத்துவத்தை முனிவர்கள் உணர்த்தியும் அவன் பின்பற்றவில்லை. அம்மன்னன் இறந்து மேலுலகு சென்ற பின் அவனை பசி வாட்டியது. இப்பசியை அடக்க தாங்கள் தான் வழிகாட்ட வேண்டுமென்று பிரம்மாவிடம் விண்ணப்பித்தான். அதற்குப் பிரம்மா, நீ அன்னதானம் செய்யாததால் உன்னை இங்கு கொடும்பசி வாட்டுகிறது. பூவுலகில் தானம் செய்யாதபொருள் இங்கு கிடைக்காது. எனவே நீ மண்ணுலகு சென்று பாதுகாப்பாக உனது சரீரத்தை மிதக்க வைப்பதற்காக நீ வெட்டிய குளத்தில் மிதந்து கொண்டிருக்கும் உனது சரீரத்தை கத்தியால் அறுத்து அதைப் புசி என்றார். வேறு வழியின்றி சுவேத கேது அவ்வாறே செய்தான். ஆயினும் அவன் பசி அடங்கவில்லை. அப்போது முனிவரொருவர் ப்ரயாகையில் நீராடு என்று சொல்ல அவ்விதமே நீராடியும் பயனில்லை. அப்போது அங்குவந்த

அகஸ்தியர் ப்ரயாகையில் அன்னதானம் செய்தால் உன்சாபம் அகலுமென்றார். தேவ சரீரத்தில் நான் அவ்விதம் செய்ய இயலாதே என்று மன்னன் தெரிவிக்க அவ்வாறாயின் கையில் உள்ள யாதாயினும் ஒரு பொருளைக் கொண்டு அதை பிறரிடம் கொடுத்து அன்னதானம் செய்விக்கலாமென கூறினார். தனது தேவ சரீரத்தில் அவ்வாறு கழற்றிக் கொடுக்க அணிகலன்கள் யாதுமில்லையே என்று கூற, நீ செய்த பிற புண்ணியங்களின் பலன்களை திரட்டி கொடு என்று கூற, தான் செய்த தர்மத்தின் பலனையெல்லாம் திரட்டி ஒரு கணையாழி ரூபத்தில் தர அகஸ்தியர் அதனை அங்கிருந்த சீடர்களிடம் கொடுத்து இப்பொருளை விற்று அன்னதானம் செய்யுமாறு கூற அவ்வாறே அன்னதானம் செய்ய சுவேத கேதுவின் கொடும்பசி அகன்று மோட்சம் பெற்றாரென்பர்.

6. பெரியாழ்வாரால் 10 பாக்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம். ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பெருமாளை இங்கு ரகுநாத்ஜி என்று அழைக்கிறார்கள்.

7. மகாபுண்ணிய தீர்த்தமான இந்த ப்ராயாகையில் பல தீர்த்தங்களும்பல நதிகளும் சங்கமிக்கின்றன. கங்கையும், யமுனையும் கலப்பதோடு அலகநந்தாவும் பாகீரதியும் இங்கு சங்கமிக்கின்றன. ப்ரயாகையில் நீராடும்போது மிகவும் கவனத்துடன் நீராட வேண்டும். வெள்ளப் பெருக்கும் நீரின் விரைவும் இங்கு திடீரென உண்டாகும்.

8. இத்தலத்திற்கருகிலேயே ஆஞ்சநேயர், கால பைரவர், மகாதேவர், பத்ரிநாதர் ஆகியோருக்கும் சன்னதிகள் உள்ளன.

9. பிரம்மன், பரத்வாஜர், தசரதன் ஆகியோருடன் ஸ்ரீராமபிரானும் இங்கு தவமியற்றினார்.

10. கங்கை, யமுனை, சரஸ்வதி இம்மூன்றும் கூடுமிடம் திரிவேணியாகும். அ.உ.ம. என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையான ஓங்கார வடிவமானது ப்ரயாக சேத்திரம். அ எழுத்தாகவும், பிரத்யுமனனாகவும் இருக்கிறாள் சரஸ்வதி. யமுனா உ என்ற எழுத்தாகவும், அநிருத்தனாகவும் இருக்கிறாள் ம என்ற எழுத்தாகவும், சங்கர்ஷனனாகவும் இருக்கிறாள் கங்கை.

11 இங்குள்ள ஆலமரம் அழிவற்றது. அதில் வேணிமாதவன் என்ற பெயரில் விஷ்ணு, ஆடலங்கேசர் என்ற பெயரில் சிவன், மற்றும் பிரம்மனும் இதில் வாசம் செய்கின்றனர்.

12. பாண்டவர்கள் போருக்குப்பின் தமது சத்துருக்களைக் கொன்ற பாவங்களைப் போக்க யாது வழி என்று மார்க்கண்டேயரிடம் கேட்க, அவர் ப்ரயாகை ஒன்றே சகல பாவங்களையும் போக்கவல்லது என்று பாண்டவர்களை இங்கு அனுப்பி வைத்ததாக மாத்ஸய புராணம் கூறுகிறது.

********

## திருப்பிரிதி

திருமங்கையாழ்வாரால் தொடக்க மங்களாசாசனம் செய்யப்பட்டது இத்தலம். இமயமலைக்கு வடபுறத்தில் மலைகளும் குன்றுகளும் சூழ்ந்த எல்லையற்ற அழகுள்ள இடத்தில் எங்கோ அமைந்துள்ளது. அல்லது அமைந்திருந்தது என்றும் சொல்லலாம். ஏனெனில் இத்தலம் எங்கிருந்தது என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாததால் இதனைச் சேவிக்க இயலாது.

சிறப்புக்கள்

1. திருமங்கையாழ்வார் இங்கிருந்துதான் இவர் தனது மங்களாசாசனத்தைத் தொடங்கினார். இங்கிருந்து தெற்கு நோக்கி வரும்போது வடநாட்டிலிருந்து தென்திசை வரும் வழியில் உள்ள ஸ்தலங்களில் சிலவற்றை மங்களாசாசனம் செய்து கொண்டே வந்து தென்னாடு வருகிறார். திருமங்கையாழ்வார் இத்தலத்திற்கு 10 பாசுரங்கள் வழங்கியுள்ளார். அவரது முதற்பதிகம் விளைந்த திவ்யதேசம் இதுதான்.

2. ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஜோஷிமட் என்ற இடந்தான் திருப்பிரிதி என்னும் கருத்து ஒன்றும் நிலவுகிறது. இந்த இடத்தில் தற்போது

கோவில்களும், மூர்த்திகளும் உள்ளனர். இன்னுமொருசாரர் நந்தப் பிரயாகை என்னுமிடமே திருப்பிரிதியாகுமெனவும் கூறுவர். இவ்விரண்டும் அல்ல. அது எங்கோ இமய மலைக்கு உட்புறம் அமைந்துள்ளது என்றொரு கருத்துமுண்டு.

இதில் தற்போது திருப்பிரிதி என்றழைக்கப்படும் ஜோஷிமட் ருப்பிரிதியாகாது. திருப்பிரிதி இமயத்திற்குள் உள்ளது என்று அறுதியிட்டுக் கூறுகிறார். ஸ்ரீவைஷ்ணவ சுதர்சன ஆசிரியர் ஸ்ரீமான் திரு. கிருஷ்ணசுவாமி ஐயங்கார். இவர் கூறும் கருத்துக்களே ஏற்றுக்கொள்வதற்கு உடன்பாடாய் இருப்பதாலும் அதுவே உண்மையாகுமாதலாலும் அவர் தமது கட்டுரையில கூறியுள்ள கருத்துக்களை இங்கே சுருங்கச் சொல்கிறோம்.

அ) திருமங்கையாழ்வார் வதரி, சாளக்கிராமம், நைமி சாரண்யம், சிங்கவேள் குன்றம் திருமலை என்று வடக்கு தொட்டு தெற்கு நோக்கி வரிசைக் கிரமமாக மங்களாசாசனம் செய்து கொண்டே வருகிறார். இதில் வதரி எனப்படும் பத்ரிகாச்ரமம் ஜோஷி மடத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. ஜோஷி மடமே

திருப்பிரிதியாக இருந்திருந்தால் ஆழ்வார் முதலில் ஜோஷி மடத்தை மங்களாசாசனம் செய்து விட்டு அதன்பிறகு பத்ரியை மங்களாசாசனம் செய்திருப்பர். ஆனால் ஆழ்வார் முதலில் திருப்பிரிதியை தமது திருமொழியில் 1-2ல் மங்களாசாசனம் செய்து விட்டு

அதன் பிறகு பத்ரியை மங்களாசாசனம் செய்கிறார். (எனவே ஜோஷி மடமே திருப்பிரிதியாக இருந்தால் ஆழ்வார் பத்ரியை மங்களாசாசனம் செய்திருக்க மாட்டார்)

ஆ) திருமங்கையாழ்வாரும், மற்றும் பிற ஆழ்வார்களும் தாம் மங்களாசாசனம் செய்யும் திவ்ய தேசத்தின் மருங்கமைந்த இயற்கை காட்சிகளை தம் பாடல்களில் மறவாது குறிப்பிடுவர். உதாரணமாக திருவரங்கத்தைப் பாடும் பாக்கள் பலவற்றில் ஆழ்வார் காவிரியைக் குறித்துள்ளார். கங்கை கரையில் உள்ள வதரியச்சிரமத்தை பாடும் போது முதல் ஒன்பது பாசுரங்களிலும் ஈற்றடியில் கங்கையின் கரைமேல் வதரியாச் சிரமத்துள்ளானே என்று முத்திரை பொறிக்கிறார். இதே போல் கண்டமென்னும் கடிநகர்ப்

பதிகப் பாசுரம் ஒவ்வொன்றிலும் அந்த நகர் கங்கை கரையில் உள்ளதென்பதை பெரியாழ்வார் உணர்த்தியுள்ளார். கங்கைக் கரையின் மேலுள்ள ஜோஷி மடமே திருப்பிரிதியாகில் திருப்பிரிதிப் பதிகப் பாசுரம் ஒன்றிலாவது கங்கையைப் பற்றிச் சொல்லி இருக்கவேண்டும். கங்கை பெருகி ஓடும் நதி. திருப்பிரிதி பாசுரத்தில் தடஞ்சுனைகளையும், அருவிகளையும் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்கிறார். இவைகள் கங்கைகரையில் இல்லை. ரிஷிகேசத்திலிருந்து வதரி வரை செல்லும் பாதையை ஒட்டியே கங்கை பாய்கின்றது. திருப்பிரிதிக்கு கங்கையின் சம்பந்தத்தை திருமங்கையாழ்வார் சொல்லாமல் இருப்பதிலிருந்தே திருப்பிரிதியானது கங்கையின் உற்பத்தி ஸ்தானங்களையெல்லாம் தாண்டி வதரிக்கு மிகவும் வடக்கே இருந்திருக்க வேண்டும் என்று காட்டும் முக்கியமான அகச் சான்றாகும்.

இ) திருமங்கையாழ்வார் திருப்பிரிதிக்கு இட்டருளிய பாசுரங்களில் எல்லாம் இமயத்துள் என்று இந்த திவ்ய தேசத்தைக் குறிக்கிறார். இமயத்துள் என்னும் பதத்தாலே இமயத்தின் நடுவில் இருப்பதே திருப்பிரிதி

என உணர்த்துவதன் மூலம் இமயத்தின் தென்பகுதியில் உள்ள வதரி முதலிய திவ்ய தேசங்களைக் காட்டிலும் திருப்பிரிதியை வேறுபடுத்திக் காட்டுகிறார். இவ்வாறே பிரிதியில் உள்ளவனென்றும் இமயத்துள் இருப்பவனென்றும் ஆழ்வார் திருவுள்ளம் பற்றியதாலே ஏற்றினை இமயத்துள் எம்மீசனை என்ற பதத்திற்கு

பெரியவாச்சான் பிள்ளை பொருள் கூறுமிடத்து ஹிமவானில் திருப்பிரிதியில் வந்து ஸந்நிஹிதனானவன் என்று அருளினார். (பெரியவாச்சான் பிள்ளை கங்கையையோ வதரியையோ குறிப்பிடவில்லை. இமயத்தை ஹிமவான் என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது)

ஈ) திருமங்கையாழ்வார் தமது பாசுரங்களில் திருப்பிரிதியின் இயற்கை காட்சிகளை விளித்துப் போகும்போது அங்கு வாழும் காட்டு மிருகங்களை தமது பாக்களில் கூறிப்போகிறார்.

விலங்கல் போல்வன விறலிருஞ் சினத்தன வேழங்கள் துயர் கூற

விலங்கொள் வாளெயிற்றரியவை திரிதரு பிருதிசென்றடை நெஞ்சமே

பெரிய யானைகளை இம்சித்துக் கொண்டு சிங்கங்கள் சஞ்சரிக்கும் பிரதேசம் என்கிறார்.

ஏனங்கள் வளைமருப் பிடந்திட என்று காட்டுப் பன்றிகள் வாழுமிடம் என்கிறார்.

போர்கொள் வேங்கைகள் புனவரை தழுவிய பூம்பொழிலிமயத்துள் என்று போர் செய்தலையே தொழிலாக கொண்ட வேங்கைப் புலிகள் திரியுமிடமென்கிறார்.

இரும்பசியது கூர அரவமாலிக்கும் பசியினால் பாம்புகள் பெருமூச்சு விடுமென்கிறார்.

களிறென்று பெரிய மாசுணம் வரை யெணப் பெயர்தரு பிரிதி யானைகளை விழுங்கக்கூடிய மலைப் பாம்புகள் ஊர்ந்து செல்லக்கூடி இடமென்கிறார். திருப்பிரிதியை இவ்வண்ணம் பாடியிருக்கும் திருமங்கையாழ்வார்,

வதரியைப் பற்றிப் பாடும்பொழுது ஒரு பாசுரத்திலாவது துஷ்ட மிருகங்கள் இருப்பதைப்பற்றிப் பாடவில்லை பாரோர் புகழும் வதரியென்று திருமங்கையாழ்வார் காலத்திலேயே ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருடந்தோறும் வதரி சென்று வந்திருக்கிறார்களாகையாலே துஷ்ட மிருகங்கள்

சஞ்சரித்திருக்க முடியாது. ஆகவே சிங்கம், புலி, மலையரவு ஆகிய துஷ்ட ஜந்துக்கள் வாழுமிடமாய் பாடப்படும் திருப்பிரிதி வதரிக்கு 20 மைல் தெற்கே உள்ள ஜோஷி மடமாக இருக்கவே முடியாது.

ஜோஷி மடம் பிரிதியாய் இருக்க முடியா தென்பதற்கும் அடர்ந்த காட்டுப் பிரதேசமொன்றில் அமைந்தது திருப்பிரிதி என்பதற்கும் இது முக்கியமான அகச்சான்றாகும். இந்த அகச்சான்றுகள் போக, சில புறச்சான்றுகளையும் இனி காண்போம்.

(உ) பெரியவாச்சான் பிள்ளையின் திருமொழி வ்யாக்யானமே முக்கியமான புறச்சான்றாகையால் அதை முதலில் ஆராய்வோம். பேராசிரியரான பெரியவாச்சான் பிள்ளையின் காலம் சுமார் 700 ஆண்டுகட்கு முற்பட்டதாகும். அக்காலத்தில் திருவரங்கமும் திருப்புல்லாணியும் எங்கேயுள்ளதென்பது எவ்வளவு பிரசித்தமாயிருந்ததோ அவ்வளவு பிரசித்தமாயிருந் திருக்கும். திருப்பிரிதியின் ஸ்தானமும். ஆகையால் திருப்பிரிதியின் ஸ்தானத்தை

நிர்ணயிப்பதில் ஆழ்வார் பாசுரத்திற்கு உள்ள பலம் ஆச்சான் பிள்ளையின் வியாக்கியானத்திற்கும் உண்டென்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பரமகாருணிகரான பெரிய வாச்சான்பிள்ளை திருவேங்கிடம் எப்படித் தமிழ்நாட்டிற்கு எல்லையோ அதுபோல உகந்தருளிய நிலங்களுக்கெல்லாம் எல்லையாயிருப்பது திருப்பிரிதி என்று அருளியிருப்பது மற்ற திவ்யதேசங்கள் அனைத்திலும் வடக்கே இருப்பது என்று ஐயந்திரிபறக் காட்டுகிறது.

ஊ) நாலாயிரத் திவ்ய பிரபந்தங்களின் பழைய பதிப்புகளிலும் நூற்றெட்டுத் திருப்பதிகளைப் பற்றியும் அங்குள்ள கோயில், விமானம், தீர்த்தம், பெருமாள் திருக்கோலம் பற்றியும் பல விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வடநாட்டு திவ்ய தேசங்கள் பலவற்றில் முஸ்லீம்கள் படையெடுப்பால் பல சன்னதிகள் சிதிலமடைந்தன. எனவே வடநாட்டு ஸ்தலங்கள் பலவற்றில் நூல்களில் உள்ள அட்டவணையில் கண்டுள்ள விபரப்படியுள்ள சன்னதிகள் காணப்படுவதில்லை. ஆனால் இமய மலைப் பிரதேசத்தில் முஸ்லீம் படையெடுப்பு

இல்லாமையால் ஸ்ரீபதரியிலும், கண்டமென்னும் கடி நகரிலும், இவ்விபரத்தில் கண்டபடியே சன்னதிகள் உள்ளன.

ஜோஷி மடத்தில் திருப்பிரிதியின் லட்சணத்தை உடைய சன்னதியோ, விமானமோ, தீர்த்தமோ, திருக்கோலமோ எதுவுமில்லை. திருப்பிரிதியைப் பற்றி இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள்.

பெருமாள் - பரமபுருஷன், கிழக்கே திருமுகம், புஜங்க சயனம், பார்வதிக்குப் பிரதயட்சம்.

தாயார் - பரிமளவல்லி நாச்சியார்

விமானம் - கோவர்த்தன விமானம்

தீர்த்தம் - இந்திர தீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம், மானஸரோவஸ்.

மேலும் விபூதூர் வித்வான் கி.வேங்கிடசாமி ரெட்டியாரிடமிருந்து கிடைத்த 108 திருப்பதியந்தாதியென்னும் கட்டளைக் கலித்துறையிலமைந்த நூலில்,

"நாரங்களுக் கிறைவன் பார்வதிக்கு நயந்தருள்வோன்
வாசஞ்செய் மானச வாவி அனந்தன் வர்த்தனத்தில்
பாரமர் பரிமளவல்லிக் கின்பாகத் தென்பால் துயிலும்

ஆரம் செறி இமயப்பால் திருப்பிரித்திக் கரசே”

என்று அமைந்துள்ள இப்பாட்டிலும் இவ்விவரங்களே காணப்படுகின்றன.

இவைகள் பூர்வாச்சார்யர்களின் காலத்திற்குப் பிறபட்ட நூல்களாயினும் இவற்றில் கண்டுள்ள விபரங்களில் முக்கியமானவை ஆழ்வாருடைய பாசுரங்களோடும் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்தோடும் ஒட்டியிருப்பதைக் கண்டும் திருப்பிரிதியின் ஸ்தானத்தை நிர்ணயிக்கலாம்.

ஊ) 108 திருப்பதியந்தாதி பாடலில் மான ஸரஸ் என்னும் தீர்த்தம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பண்டைப் புராணங்களும் இதிகாசங்களும் மானஸரோ வரம் என்னும் இந்த நதியை பாரதத்தின் வட எல்லையாக வர்ணிக்கின்றன. இந்நதி இன்றும் திபெத் நாட்டில் இதே பெயரில் வழங்கப்படுகிறது. இது 54 மைல் சுற்றளவும் 200 சதுர மைல் பரப்பளவும், 250 அடிக்கும் மேலான ஆழத்தையும் கொண்டது. கடல் மட்டத்திற்கு மேல் 15000 அடி உயரத்தில் கடல் போல் விளங்குகிறது. பிரம்மன் தனது மனத்தாலே (ஸங்கல்பத்தாலே) முதன் முதலில் பாரத தேசத்தின் வட

எல்லையாக இந்த ஏரியைச் சிருஷ்டித்தால் மானஸரஸ் என பெயர் உண்டானதாகக் கூறுவர். உலகிலேயே மிகப் பெரியதும் அழகியதுமாகையால் ஸரோவரம் என்னும் புகழைப் பெற்றுள்ளது.

மிக முக்கியமான இயற்கை காட்சியொன்று ஒரு திவ்ய தேசத்தில் இருக்குமானால் திருமங்கை ஆழ்வார் அதை தமது பாடலில் குறிக்காமல் விடார். அவ்வாறெனின் இந்த ஏரியைக் குறித்திருக்கிறாராவெனின் முதல் பாசுரத்திலேயே தடஞ்சுனை பிரிதி என்று பிரிதிக்குத் தடஞ்சுனை என்றே பேரிட்டு மானஸரோ வரத்தையே உணர்த்துகிறார் என்பது நமது பதில். ஸரோவரம் என்பதை தடஞ்சுனை என்று தமிழாக்கியுள்ளார். தடஞ்சுனை பிரிதி பெரிய ஏரிகளை உடைய பிரிதி என்றும் பொதுவாய் பொருள் கொள்ளலாம்.

எ) மேலும் இங்குள்ள பெருமாளின் பெயர், பிராட்டியின் பெயர், சயன திருக்கோலம், போன்றவற்றையும், திருமங்கை ஆழ்வார் தமது பாசுரங்களில் குறிக்கிறார்.

பணங்கொள் ஆயிரம் உடைய நல்
அரவணைப் பள்ளி கொள் பரமா என்று
இறங்கி வானவர் மணிமுடி பணிதர

இருந்த நல்லிமயத்துள்

என்று பெருமாளின் திருநாமத்தோடு அவரின் சயனத் திருக்கோலத்தையும் குறிக்கிறார். இப்பாசுரத்திற்கு முன் உள்ள பாசுரத்தில் கரைசெய் மாகடல் கிடந்தவன் என்று திருப்பாற்கடல் நாதனை அனுபவித்து விட்டு அங்கே கிட்டமுடியாதாரும் அனுபவிக்கலாம்படி இங்கே தன் திருக்கோலத்தைக் காட்டுகிறான் என்னும் ஸங்கதி தோன்ற அப்படித் திருப்பாற்கடலில் சாய்ந்தருளினவன் இங்கே வந்து எழுந்தருளியிருக்கும் படியை அனுஸந்திக்கிறார் என்று பெரியவாச்சான் பிள்ளை இப்பாசுரத்திற்கு அவதாரிகை இட்டிருப்பதிலிருந்து திருப்பிரிதியின் பனங்கொள்ளாயிரமுடைய நல்லரவணைப் பள்ளி கொள் பரமனாகவே எம்பெருமான் சேவை ஸாதிக்கிறார் என்று விளங்குகிறது. எனவே புஜங்க சயனமில்லாத ஜோஷி மடக்கோவில் திருப்பிரிதியாய் இருக்க இடமில்லை என்பது தெளிவு. பார்வதியோடு சிவன் வாழும் கயிலை மலைக்கு அருகில் உள்ள திருப்பிரிதியில் எம்பெருமானைப் பார்வதிக்குப் பிரதயட்சமாக ப்ரபாவ நூலில் பேசியிருப்பதிலும் பொருத்தமுள்ளது.

இவ்வண்ணமாக நூற்றெட்டுத் திருப்பதி ப்ரபாவ நூல்களில் திருப்பிரிதிபற்றிக் கூறியுள்ள விபரங்கள் ஆழ்வார் பாசுரங்களோடும் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்தோடும் ஒத்திருக்கையாலே பாரதத்தின் வட எல்லையில் இமயத்தினுள்ளே மானஸரோவர தீர்த்தத்தில் உள்ளதொரு அடர்ந்த காடே திருப்பிரிதியென்று பெயர் பெற்றிருந்ததென்றும், அதில் எம்பெருமான் பரமபுருஷன் என்னும் திருநாமத்தோடு பரிமளவல்லி நாச்சியாரோடு ஆதிசேட சயனத்திருக் கோலத்தில் எழுந்தருளியுள்ளார் என்பது விளங்குகிறது.

திருப்பிரிதி என்னும் திருநாமம் எவ்வாறு வந்துள்ளதெனில், பதரி, கண்டம் முதலான வடநாட்டுத் திருப்பதித் திருநாமங்களைப் போல இதை வடமொழி பெயராகக் கொண்டு பிரீதி எனவழைத்து காலப்போக்கில் பிரிதியாக மருவியுள்ளதாகக் கருதலாம். எம்பெருமான் பிரீதியுடன் (உகப்புடன்) எழுந்தருளியிருக்கும் இடம் என்றபடி.

ஏ) அல்லது இத்திருநாமம் தமிழர்கள் இட்ட திருப்பெயரே எனக் கொண்டால் பாரத தேசத்தை, தேசாந்திரத்திலிருந்து பிரிக்குமிடமாகையாலே பிரிதி

என்று பெயரிட்டதாகக் கொள்ளலாம். உகந்தருளின நிலங்களுக்கு எல்லை என்று பெரியவாச்சான் பிள்ளை பிரிதியைக் குறிப்பிட்டிருப்பது இப்படி பொருள் கொள்ள இடமளிக்கிறது. மானஸரோவரம் பாரதத்தின் வட எல்லையென்று இதிஹாச புராணங்களில் காட்டப்பட்டிருப்பதும் இப்படி பொருள் கொள்வதற்குப் பொருந்தியிருக்கிறது.

இந்த மானஸரோவரக் கரையில் திருப்பிரிதி எங்கோ இருக்க வேண்டும் என்பதுதான் தெளிவு.

3. திருமங்கையாழ்வாரால் மட்டும் 10 பாக்களில் மங்களாசாசனம். திருமங்கை தமது மங்களாசாசனத்தை இங்கிருந்துதான் துவங்குகிறார்.

ஆழ்வார் பாடிய திருப்பிரிதி இமயத்துள் திபெத் நாட்டில் மானசரோவர் ஏரிப்பக்கம் பக்கம் இருந்திருக்க வேண்டும். இன்று ஆதிசங்கரர் ஸ்தாபித்த நரசிம்மரையே திருப்பிரிதி பெருமாளாக எல்லோரும் தரிசித்து வருகிறார்கள்.

********

## திருவதரியாச்சரமம் (பத்ரிநாத்)

திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட இத்தலம் வடநாட்டுப் பதிகளில் மிக முக்கியமான பத்ரிகாச்ரமம் எனப்படும் பெரும் திவ்ய தேசமாகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 10,500 அடி உயரத்தில் இமய மலையில் பனிக்குன்றுகட்கு மத்தியில் பனிபடர்ந்த சூழலில் இலந்தை மரக்காடுகள் நிறைந்து விளங்கும் இடத்தில் அமைந்துள்ளது. பத்ரி என்றால் இலந்தை என்று பொருள்.

வரலாறு

எம்பெருமான் தானாக சுயம்புவாக எழுந்தருளியிருக்கும் இடமாகவும், மோட்சத்தைத் தரத்தக்க ஸ்தலங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ள இத்தலம் பற்றி தனி நூலொன்றே படைக்கும் அளவிற்கு வடநாட்டுப் புராணங்களும், வடநாட்டு நூல்களும் குறிப்புக்களை வாரிவாரியிறைக்கின்றன. இங்குதான் பெருமாள் தாமே குருவாகவும், சீடனாகவும் இருந்து கொண்டு திருமந்திர உபதேசத்தை செய்தருளினான். ஓம் நமோ நாராயணாய

என்ற மந்திரத்தை நாராயணன் என்ற திருநாமத்துடனே வந்து உலகத்திற்கு உகந்தருளின இடம் இந்த தலமாகும். திருமந்திரம் பகவான் மூலமாகவே வெளியான இடம். எம்பெருமானைச் சரண்புகுந்து மோட்சம்புகும் பக்தர்கட்கு மிக எளிய வழியான திருமந்திர உபதேசத்தை போதித்துத் தன்னை காட்டிக் கொடுத்த தலம்.

மகாலெட்சுமிக்கு மிகவும் பிடித்தமான பத்ரி (இலந்தை) எனப்படும் மரத்தின் கீழே அமர்ந்ததால் பத்ரிகா-ஆஸ்ரமம் – பத்திரகாச்ரமம் ஆயிற்றென்பர். உபதேசம் செய்வதற்கு ஆஸ்ரமம் அவசியமன்றோ. எம்பெருமான் திருமந்திரத்தை உபதேசிக்க இந்த இடத்தை ஒரு ஆஸ்ரமமாக தேர்ந்தெடுத்ததால் பத்திரகாஸ்ரமம் ஆயிற்றென்பர். இங்கு கோயிலைச் சுற்றிலும் பனிமலைகள் உள்ளன. இதற்கு எதிர்புறம் அமைந்துள்ள நீலகண்ட பர்வதம் காண்பதற்குப் பேரெழில் பொலிந்ததாகும்.

மூலவர் - பத்ரி நாராயணன், சங்கு சக்கரத்துடன் சதுர் புஜங்களுடன் கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம்.

தாயார் - அரவிந்த வல்லி

தீர்த்தம் - தப்த குண்டம்

ஸ்தல விருட்சம் - பத்ரி, இலந்தை மரம்

விமானம் - தப்த காஞ்ச விமானம்

சிறப்புக்கள்

1. எம்பெருமான் மலைமேல் எழுந்தருளியுள்ளான். கடல் நடுவே எழுந்தருளியுள்ளான். பரம பதத்தில் எழுந்தருளியுள்ளான். அந்தர்யாமியாக பக்தர்களின் உள்ளத்தில் எழுந்தருளியுள்ளான். பனிபடர்ந்த சூழலில் மட்டும் இருக்க வேண்டாமா என்ன? சீதள மானவன், க்ஷீராப்தியாக இருப்பவன், தண் என்னும் குளிர் மலர்கள் கொண்ட மாலை பூண்டவன் பனிக்கடலில் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்தவன். பனிபடர்ந்த சிகரங்களுக்கு ஊடே மட்டும் இருக்க வேண்டாமா என்ன, இருக்க வேண்டுமென நினைத்ததால்தான், எம்பெருமான் எந்நேரமும் பனிகொட்டிக் கொண்டிருக்கும் இந்த இமயமலைச் சாரலில் பனிபடர்ந்த சூழலில் அமர்ந்தான் போலும்.

2. 108 திவ்ய தேசங்களிலேயே இங்குதான் பகவான் ஆச்சாரியன் ரூபத்தில் எழுந்தருளிய ஸ்தலமாகும். மற்றெல்லா ஸ்தலங்களிலும் அவனருள் காட்டி அவனது

பலத்தைக் காட்டி நின்றாலும் இங்கு மட்டும்தான் ஆச்சார்ய திருக்கோலத்தில் திகழ்கின்றான். பக்தர்களுக்காகவும் இவ்வுலகிற்காகவும், பிராட்டிக்காகவும், பிற ஸ்தலங்களில் தன்னை வெளிக்காட்டிய எம்பெருமான் திருமந்திரத்தை உபதேசம் செய்ய தன்னை ஆச்சார்யனாக வெளிப்படுத்திய ஸ்தலம் இது ஒன்றுதான். எனவேதான் இங்கு தனது இடது கைகளை யோக முத்திரையாகக் கொண்டு ஒரு தபஸ்வியின் வடிவில் இலந்தை மரத்தடியில் பத்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார்.

3. இங்கு செல்வதற்கு முதலில் ஹரித்துவார் வந்துவிடவேண்டும். எப்போதும் பனி பெய்வதால் கடுங்குளிரில் அமிழ்ந்திருக்கும் இப்பிரதேசத்திற்கு இரண்டு மூன்று உள்ளாடைகளுடனும் கம்பளிப் போர்வைகளுடனும் செல்ல வேண்டும். குளிர்தாங்கும் பருவம் இளமை என்பதால் (கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம் என்றாற்போல்) மிக இளமை வயதிலேயே இங்கு சென்று வந்துவிட வேண்டும். மிக்க இளம் வயதில் இங்கு செல்ல வேண்டுமென்பதை

திருமங்கையாழ்வார் தமது பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளார். ஹரித்துவாரில்
பிரம்ம குண்டம் என்னும் தீர்த்தத்தில் நீராடி 15 மைல் தொலைவில் உள்ள ரிஷிகேசம் சென்று அங்கிருந்து சுமார் 80 மைல் தூரம் சென்று பத்ரியை அடையலாம். ரிஷிகேசத்திலிருந்து பத்ரி செல்லும் வழியில்தான் கண்டமென்னும் கடிநகர் உள்ளது. (பத்ரியை சேவித்துவிட்டுத் திரும்பும்போது கண்டமென்னும் கடிநகர் செல்தலே நன்று)

4. பத்ரிநாத், அலகநந்தாவும், தோலி கங்காவும் சங்கமமாகும் இடத்தில் அமைந்துள்ளது. அலகநந்தாவின் கரையில்தான் கோவில் அமைந்துள்ளது. இந்த பத்ரி நாதனைக் குறித்து நாரதர் அஷ்டாச்சர மந்திரத்தால் ஜபம் செய்து மஹா விஷ்ணுவின் அருள்பெற்றார் என்னும் ஓர் வரலாறும் உண்டு.

5. பத்ரிநாத் செல்லும் வழியில் ஹனுமான் கட்டி என்ற ஓர் இடம் உள்ளது. இங்கு பீமனும் அனுமனும் சண்டையிட்டதாகக் கூறுவர். ஹனுமான் கட்டியைத்

தாண்டி சுமார் 4 கி.மீ. சென்றதும் பத்ரிகாஸ்ரமம் காட்சி தரும்.

6. பத்ரிநாராயணன் ஆலயத்திற்கு எதிரில் தப்த குண்டம் என்னும் தீர்த்தம் உள்ளது. இது ஒரு வெந்நீர் ஊற்றாகும். தப்த குண்டத்தில் நீராடிவிட்டு சில படிகள் ஏறிச்சென்றதும் கருடாழ்வார் நமக்கு காட்சி தருகிறார். கருடாழ்வாரைத் தரிசித்துவிட்டுத் தான் பத்ரிநாராயணன் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். இங்கு பத்ரி நாராயணன், கருடாழ்வார், நாரதர், நாராயணன் முதலானோர் மிக்க பேரெழில் பொங்க வீற்றிருக்கின்றனர்.

7. இங்கு பெருமாள் சாளக்கிராம மூர்த்தியாக (ஸாளக்கிராமச் சிலையாக) எழுந்தருளியுள்ளார்.

8. இங்கு பெருமாளுக்கு நடைபெறும் சகல விதமான பூஜைகளும் (திருமஞ்சனம்) திருவாராதனம், சாத்துமரை மக்களுக்கு எதிரிலேயே நடைபெறுகின்றன. திரைபோடுவது இல்லை.

9. இங்கு இரவில் பெருமாளுக்கு சாந்தி பஞ்சகம் என்னும் பூஜை நடைபெறும். இந்த பூஜைக்குரிய மந்திரங்களை வடநாட்டு பிராம்மணரே ஓதுவர். அப்போது

எம்பெருமானின் ஆடைகளையும், மாலைகளையும் கலைவர். இந்த நிகழ்ச்சிக்கு கேரள தேசத்து நம்பூதிரிகளே தலைமை அர்ச்சகராக இருந்து செயல்படுவர். இவ்வாறு எம்பெருமானின் ஆடைகள் மற்றும் மாலைகளை களைந்துவிட்டு சிறிய துண்டு ஒன்றை அணிவிப்பர். இந்நிகழ்ச்சிக்கு கீதகோவிந்தம் என்று பெயர். மிகவும் நல்லொழுக்கம் வாய்க்கப் பெற்றவர்களும், சாஸ்திரங்களிலும், சமஸ்கிருதத்திலும் மிக்க தேர்ச்சி பெற்ற பிராம்மணர்களே இந்த நிகழ்ச்சிக்கு குழுவினராக நியமிக்கப்படுவர். இந்த பூஜை நடைபெறும் சமயம் பெருமாளின் பக்கத்தில் அமர்ந்தே பூஜை நிகழ்ச்சிகளை பக்தர்கள் தரிசிக்க முடியும். இதற்குத் தனிக் கட்டணம் உண்டு.

10. இங்கு கோவிலின் வடபுறம் கங்கை கரையில் பிரம்ம கபாலம் என்னும் ஒரு இடம் உள்ளது. இங்குள்ள ஒரு பெரிய பாறையில் பித்ருக்களுக்கு சிரார்த்தம் செய்யப்படுகிறது. இவ்விடத்தில் சிரார்த்தம் செய்தால் நம் முன்னோர்களின் அனைத்து தலைமுறையினர்க்கும் மோட்சம் கிடைப்பதாகவும், அதற்குப் பிறகு சிரார்த்தம் செய்ய வேண்டியதில்லை என்பதும் ஐதீஹம்.

11. இங்கு இராமானுஜருக்கும், சுவாமி தேசிகனுக்கும் தனித்தனியே சன்னதிகள் உள்ளன.

12. இங்கு அமைந்துள்ள வசுதரா என்ற பனிமலையில் நீர்வீழ்ச்சி ஒன்று உள்ளது. இந்த நீர் வீழ்ச்சியின் பனித்திவலைகள் மிகவும் புனிதம் வாய்ந்தவை என்றும், இவைகள் மேனியில் படுதலால் புனிதம் உண்டாகிறதென்றும் நம்பிக்கை. இங்கு யாத்திரை செல்வோர் இந்த திவலைகளில் குளித்து வருவர்.

13. எல்லையற்ற பெருமைகொண்ட இத்தலத்திற்கு விசாலபுரி என்ற பெயரும் உண்டு. பாண்டவர்களின் அவதாரஸ்தலம் இதுதான் என்று ஒரு கருத்தும் உண்டு.

14. இத்தலம் 6 மாதங்களுக்கு மட்டுமே பக்தர்களின் தரிசனத்திற்குத் திறந்துவிடப்படும். அதாவது குளிர் காலமான 6 மாதத்தில் விடாது பனிபெய்து இத்தலத்தையே மூடுமளவிற்கு வருவதால் குளிர்காலமான 6 மாதத்திற்கு இத்தலம் மூடப்பட்டு சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமியன்று மீண்டும் திறக்கப்படும். பூட்டப்பட்ட 6 மாதத்தில் தினந்தோறும் இரவில் தேவர்கள் இங்கு வந்து பாரிஜாத மலர்களால் எம்பெருமானை அர்ச்சிப்பதாகக் கூறுவர். அதாவது

பனிக்காலத்தில் கோவிலை அடைத்து விட்டு 6 மாதங்கழித்து திறந்து பார்க்கும்போது முதல்நாள் இரவில் பெருமாளுக்குச் சூட்டிய மலர் மாலைகள் மறுநாள் காலையில் பார்த்தால் எந்த அளவுக்கு லேசாக வாடியிருக்குமோ அந்த அளவிற்குத்தான் மலர்களின் வாட்டம் இருக்குமாம். அதனால் தான் மூடப்பட்ட 6 மாத காலமும் தேவர்கள் வழிபட்டுச் செல்கின்றனர் என்னும் ஐதீஹம் உண்டானது.

15. மே மற்றும் ஜூன் மாதங்களே இந்த யாத்திரைக்கு மிகவும் உகந்ததாகும்.

16. பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இப்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார்கள்.

********

## கடவுள்களின் பள்ளத்தாக்கு - புனித யாத்திரை

'திவ்ய தேச க்ஷேத்ர தீர்த்த யாத்திரை செய்யக் குதூகலமுள்ள பக்தர்களுக்கு, அவை சம்பந்தமான சகல விவரங்களையும் தெரிவிப் பதற்கான பத்ரி யாத்திரை விளக்கு'

- மேற்கண்ட தலைப்பின் கீழ் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் 40 வருஷங்களுக்கு முன் ஒரு சுவாரஸ்யமான புத்தகம் எழுதியிருக்கிறார். அவர் போனபோது யாத்திரையில் உள்ள கஷ்ட-சுகங்களையும், தபால் ஆபீஸ் விவரங்கள் உட்பட்ட காட்சிகளையும் சம்ஸ்கிருதமும் தமிழும் மயங்கிக் கலந்த ஒரு வசீகர வசன நடையில் விவரித்திருக்கிறார்.

8-ம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமங்கையாழ்வார் தன் பாசுரத்தில்... 'முதுகு பற்றிக் கைத் தலத்தால் முன்னொரு கோல் ஊன்றி, விதிர்விதிர்த்துக் கண் சுழன்று மேற்கிளை கொண்டிருமி, இது வென் அப்பர் முத்தவா றென்று இளையவர் ஏசா முன், மது உண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே' என்று முதுகில் ஒரு கை வைத்துக் குச்சி ஊன்றி இருமிக்கொண்டு, மேல் மூச்சு வாங்கிக்கொண்டு - சின்னப் பையன்கள் 'தாத்தா

போறார் பாரு' என்று கேலி பண்ணுவதற்கு முன்னமே பத்ரி போய் சேவித்து விடுவோம் என்று வற்புறுத்தியுள்ளார். எனவே, பத்ரி நாராயணனை வணங்கப் பயணப்படத் தீர்மானித்து விட்டேன்.

முதலில், ஆக்ஸ்போர்டு அட்லாஸ் ஒன்று வாங்கிப் பார்த்தால், பத்ரி, உத்தரப்பிரதேசத்தில் இந்தியாவின் உச்சந்தலையில் திபெத், சைனா எல்லைகளின் அருகில் இருக்கிறது. இருந்தும், அதற்குப் போகிற வழிகள், பயண ஏற்பாடுகள் எல்லாம் மிகச் சுலபம். காசு வேண்டும்; அவ்வளவுதான். டெல்லிக்குப் போய்ப் பணத்தைக் கொடுக்க ஒப்புக் கொண்டவுடன், பணிக்கர் ட்ராவல்ஸ் 15-வது நிமிஷத்தில் காரை டெல்லி ஏஷியாட் கெஸ்ட் அவுஸுக்கு அனுப்பி விட்டார்கள். பஸ்ஸிலும் போகலாம்.

நான் 20 வருஷங்களுக்கு முன் டெல்லியில் இருந்தபோது கற்றுக் கொண்ட இந்தியைச் சற்றே தூசு தட்டி, டிரைவர் பேர் கேட்டேன். "நாராயண் சிங்" என்றான் அந்த இளைஞன்.

'ஆகா... பேரே என்ன சகுனமாக இருக்கிறது! பகவான் நாராயணனே நமக்குச் சாரதி ரூபத்தில் வந்துவிட்டான்.

இனிமேல் நமக்கு என்ன பயம்!' என்று நிம்மதியாக காரில் ஏறிக் கொண்டோம் (நான், மனைவி, மாமனார், மாமியார்).

நம்பிக்கை தப்பு! நாராயண் சிங் எடுத்த எடுப்பிலேயே ரூர்க்கி போகும் ரஸ்தாவில் 100 கிலோமீட்டரைத் தொட்டான். மலைப்பாதைகளில் சரேல் சரேல் என்று தெலுங்குப் படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி போல் ஓட்டினான். வாயால் பால் பாயின்ட்டைக் கவ்விக் கொண்டு, இரண்டு கைகளையும் பயன்படுத்தி கார் காஸெட்டை மாற்றி, இமாசலி பாஷையில் நாட்டுப் பாடல்களைக் கேட்டதும் இன்னும் உற்சாகமாகி, மாண்டிகார்லோ போல கொண்டை ஊசிகளைச் சாப்பிட்டான். அனைவருக்கும் வயிற்றில் பயம் பிரவாகிக்க, "நாராயண் சிங்... தேக்கோ! பத்ரி போனால் மோட்சம் கிடைக்கும் என்றாலும், இத்தனை சீக்கிரத்தில் போக விரும்பவில்லை" என்று அவனிடம் சொல்ல விழைந்து, நான் பேசிய இந்தி போதாததால் (குளிர்)... சும்மா நகங்களை ருசித்துக் கொண்டு, முழங்கால்களை ஒட்ட வைத்துக்கொண்டு, பகவான் நாராயணன்

மேலும், அம்பாஸடரின் சஸ்பென்ஷன் மேலும் நம்பிக்கை வைத்துச் சென்றோம்.

நாங்கள் போன பகுதி உத்தரப் பிரதேசத்தின் கடுவால் ஜில்லாவின் மலைப் பிரதேசம். இமாலய மலைப் பர்வதங்களின் பக்கவாட்டில் கீறி கோடு போட்டாற்போல பார்டர் ரோடு இலாகா சாமர்த்தியமாக அமைத்த பாதை. ஒரு மலையில் ஏறி இறங்கி, ஒரு பெய்லி பாலத்தைக் கடந்து, அடுத்த மலையில் ஏறி மறுபடி இறங்கிச் செல்லும்போது, கூடவே அலகாநந்தா நதி பிடிவாதமாகத் தொடர்கிறது. சில வேளை சிமென்ட் பச்சையில், சில வேளை வெண்மையாக, சில வேளை அகலமாக அருகிலேயே, சில வேளை நரைமுடிபோல் மெல்லிசாகத் தெரியும் ஆழத்தில்! அநேக உற்சாகத்துடன் கற்களை உருட்டிக் கொண்டு இங்கேயும் அங்கேயும் நீரருவிகள் சுதந்திரம் எடுத்துக்கொண்டு, சாலையின் குறுக்கே உற்சாகமாகச் செல்ல... எந்தச் சமயத்திலும் கல் குன்றோ மலைச்சரிவோ எதிர் லாரியோ வரக்கூடிய... உடல் பூரா அட்ரினலின் பிரவகிக்கும் பயணம். ஆழ்வார் சொன்னது சத்தியமே! இளைய வயதிலேயே செல்ல வேண்டிய

பயணம். இந்த ரோடுகளைத் தினம் தினம் இயற்கையோடு போராடித் திறந்து வைத்திருப்பதே பெரிய சாதனைதான்!

நாராயண் சிங் உற்சாகமாக, அங்கங்கே இந்தப் பாதையில் விழுந்து நொறுங்கிய பஸ்களையும் அலகா நந்தாவில் அடித்துக் கொண்டு போன உடல்களையும் பற்றி விவரித்து... குளிர் போதாது என்று உபரியாக நடுங்க வைத்துக்கொண்டிருந்தான். புல்டோஸர்களும், டீசல் நாகரிகமும், எஸ்.டீ.டி-யும், ஸாட்டிலைட்டும் உள்ள இந்தக் காலத்திலேயே இத்தனை கஷ்டப்படும்போது, ஆதிசங்கரர் இங்கே வந்து இந்தக் கோயிலை ஸ்தாபித்திருக்கிறார்; திருமங்கையாழ்வார் - தேவப்ரயாகை, ஜோஷிமட், பத்ரி மூன்று இடங்களுக்கும் வந்து பாடியிருக்கிறார் என்பது ஆச்சர்யமாக இருக்கிறது.

பத்ரிகாசிரமத்துக்குப் போகும் வழி உங்களுக்கெல்லாம் தெரியும். டெல்லி போய் அங்கிருந்து ஹரித்வார், ரிஷி கேசம், தேவப்ரயாக், கர்ணப்ரயாக், நந்தப்ரயாக், ருத்ரப்ரயாக், விஷ்ணுப்ரயாக் என்று அங்கங்கே அலகாநந்தா வில் பாகீரதி, மந்தாகினி போன்ற நதிகள்

வந்து கலக்கும். சுமார் அரை டஜன் ப்ரயாகைகளைக் கடந்து நகர் (காஷ்மீரத்தது அல்ல). அதன்பின் பீப்பல்கோட்டி, ஜோஷிமட், பத்ரிகாசிரமம். 'கடவுள்களின் பள்ளத்தாக்கு' என்று சொல்லப்படும் சுந்தரச் சரிவு. வீழ்ச்சி. உயரம் 10,350 அடி. பாதை ஹரித்வாரிலிருந்து 333 கி.மீ.

பத்ரிக்குச் செல்ல விரும்புவர்கள் வீட்டில் உள்ள அத்தனைக் கம்பளி சமா சாரங்களையும் கொண்டு செல்லவும். (பயங்கரமாகக் குளிரும்). ஊறுகாய் (சப்பாத்தி சாப்பிட்டு நாக்கு செத்துப் போகும்). ஃப்ளாஸ்க் (வெந்நீர், டீ போன்ற சமாசாரங்களுக்கு). டார்ச் லைட் (உத்தரப் பிரதேசம் முழுவதும் வோல்டேஜ் குறைவு அல்லது பவர்கட்). உங்களிடம் இருக்கும் பழைய சட்டைகள் (ஏழைகளுக்குக் கொடுக்க. விவரம் பின்னால்). செம்பு (தலையில் மொண்டு குளிக்க. நதியில் இறங்கமுடியாது. குளிரில் சுருங்கிப் போய் முற்றுப்புள்ளியாகிவிடுவீர்கள்). முதலுதவி, ரத்தக்காயம் முதலானவற்றுக்கு மருந்து மாயங்கள், சகல உபாதைகளுக்கும் மாத்திரைகள். டைகர்பாம்,

அமிர்தாஞ்சன். மூச்சு முட்டினால் மார்பைத் தேய்த்து விட மனைவி.

உத்தரப்பிரதேசத்தில் மிக ஏழ்மையான பகுதி இந்த கடுவால் ஜில்லா. பெண்கள் மூன்று வயதிலிருந்தே கடுமையாக உழைக் கிறார்கள். ஆண்கள் இத்தனைக் குளிரிலும் காலில் செருப்பில்லாமல் பாத்திரம் கழுவுகிறார்கள். அதிகாலையில் வெந்நீர் போட் டுத் தருகிறார்கள். எங்கே நின்றாலும், அங்கே மிக அழகான குழந்தைகளைப் பார்க்கலாம்... பிச்சை கேட்பதை!

கடுவால் பிரதேசத்துக் குழந்தைகளின் கன்னங்களில் மட்டும் ஆப்பிள் தெரிய, நான்கு வயதுச் சிறுமியின் முதுகில் தூளி போட்டு அதன் தங்கையோ, தம்பியோ எட்டிப்பார்க்க... குழந்தைகள் இருவரும் கைநீட்டி, "சேட் பைசா தே! மாஜி பைசா தே!" என்கிறார்கள். அம்மா, அப்பா என்ற வார்த்தைகளுக்கு முன்னமேயே 'பைசா தே' கற்றுக் கொடுக்கப் பட்டு, பைசா என்பதன் அர்த்தமோ, பிச்சை என்பதன் கொடுமையோ தெரியாத அறியாமையி லேயே பிச்சையெடுக்கத் துவங்கி விட்ட கடவுள் துண்டங்கள்! இத்தனை வருஷம் ஆகியும் ஆதார ஏழ்மையை ஒழிக்க முடிய வில்லையே... எங்கே தப்பு?

ஜன நாயகத்தைத் தூக்கி எறிந்துவிட லாமா? எல்லாக் குழந்தைகளும் விதிவிலக்கின்றி கந்தலாக, மிகக் கந்தலாக உடுத்திக்கொண்டு பிச்சை எடுக்கும் காட்சி உள்ளத்தை உருக்குகிறது. ஆகவேதான் பத்ரிக் குச் செல்லும்போது, பீரோ பீரோவாகக் குவித்து வைத்திருக்கும் பழைய துணிகளை எடுத்துச் சென்று அவர்களுக்குக் கொடுங் கள். பத்ரி நாராயணன் மிகவும் சந்தோஷப்படுவார்.

'பத்ரி' என்றால் இலந்தை மரமாம். இலந்தை மரத்தின் கீழ் நர நாராயணன் ஆயிரமாயிரம் வருஷங்களாக மோனத்தவத்தில் இருந்ததாகவும், பிற்காலத்தில் நர நாராயணன்... அர்ஜுனன் கிருஷ்ணனாக அவதரித்ததாகவும் அவர் தவமிருந்து ஏறக்குறைய கொன்று விட்ட ராட்சஸன் கர்ணனாகப் பிறந்ததாகவும் பலவிதமான கதைகள் சொல்கிறார்கள்.

கொஞ்சம் சரித்திர உண்மைகள்... இந்தக் கோயில் 8-ம் நூற்றாண்டிலிருந்து பௌத்த ஆதிக்கத்தில் இருந்தது. ஆதிசங்கரரால் வைணவத் தலமாக மாற்றப்பட்டு, இங்கே ஒரு பீடம் அமைத்தது (தாமம் என்று சொல்கிறார்கள்). உண்மைதான். இல்லாவிட்டால்

கேரளத்து நம்பூதிரிகள் இங்கே பூஜை செய்வதை விளக்கவே முடியாது. திருமங்கைமன்னன் 20 பாட்டுக்கள் பாடியிருக்கிறார். ஜோஷிமட்தான் இவர் பாடிய 'பிரதி' என்கிறார்கள். பெரியாழ்வார் 'கண்டம் கடினகர்' என்று, அலகாநந்தா முடிந்து கங்கை ஆரம்பிக்கும் தேவப்ரயாகையைப் பாடியிருக்கிறார். பத்ரி, 1937 வரை நம்பூதிரிகளின் ராஜ்யமாக இருந்து பிரிட்டிஷாரால் உத்தரப்பிரதேசம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

மலையடிவாரத்தில் சிவப்பும் தங்கமுமாக இத்தனை பிரயாகைக்குப் பின் சற்றே ஏமாற்றம் தரும், சற்றே குருத்வாராவை நினைவுபடுத்தும் அமைப்புள்ள சிவன் கோயில். விக்கிரகங்கள் குபேரன், கருடன், லக்ஷ்மி, நாரதர், வீற்றிருந்த திருக்கோலத்தில் இரண்டு திருக்கரங்களுடன் நாராயணன். (புத்தர்?) வருஷம் பூராவும் வெந்நீர் சொரியும் தப்த குண்டம். அதில் உற்சாகமாகக் குளிக்கும் சர்தார்ஜிகள் (ஆம், அவர்களும் வருகிறார்கள்). 21 தலைமுறை முன்னோர்களுக்கும் பிண்டப்ர தானம் செய்ய அலகாநந்தாவின் கரையில் கோட்டு போட்டுக் கொண்டு மந்திரம் சொல்லும்

பண்டாக்கள். தெலுங்கும் கன்னடமும் பெங்காலியும் இந்தியும் பஞ்சாபியும் ஒலிக்கும் ஒரு மினி இந்தியாவின் பக்தர் கூட்டம்.

வழக்கம்போல இச்சிலி பிச்சிலி சாமான்கள் விற்கும் கடைகள், இட்லி தோசை கிடைக்கும் தென்னிந்திய ஓட்டல்கள். என்ன... இட்லி கொஞ்சம் கல்லாக இருக்கும். அடிக்கு அடி சாமியார்கள், யோகிகள்...

இந்து மதத்தின் அத்தனை விசித்திரங்களும் பளிச்சிடும் பத்ரி எல்லையை அடைந்தவுடன் எனக்கு ஏற்பட்ட முதல் உணர்ச்சி, காப்பாற்றப்பட்டோம்... தப்பித்தோம் என்பது தான்! மானுடர்களாகிய நாம் எத்தனைச் சிறியவர்கள், அற்பமானவர்கள் என்பதை வானளாவிய பனித்தொப்பி போட்ட மலையுச்சிகளை நோக்கும்போது, இயற்கையின் மௌனமான கோபத்துடன் உணர முடிகிறது.

**சுஜாதா**

********

## வதரி வணங்குதுமே

இன்று பத்ரி, பதரிகாசிரமம் என்பதைத்தான் ஆழ்வார்கள் வதரி என்று தூய தமிழில் சொல்லுகிறார்கள். வதரி என்றால் இலந்தையைக் குறிக்கும். இங்கே இருக்கும் பெருமாள் பதரிவிஷால். இலந்தை மரத்துக்குக் கீழே தியானம் செய்யும் திருக்கோலத்தில் காட்சி தருகிறார். அதனால் இந்தப் பெயர்.

எல்லோருக்கும் குறிப்பாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தன் வாழ்நாள் முடிவதற்குள் பத்ரிக்கு ஒருமுறை சென்று வர வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஸ்ரீ வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமிகளுடன் திருமங்கை ஆழ்வார் ‘வதரி வணங்குதுமே’ என்று அருளிய பாசுரங்களுடன், ஸ்ரீ ராமானுஜர் சென்று வந்த பாதையில் பத்து நாள் யாத்திரையாகப் பத்ரிக்குச் சென்று அங்கு நான்கு நாட்கள் தங்கியது வாழ்நாளில் மறக்க முடியாத இனிய அனுபவம்.

தன்னுடைய பத்ரி பயணம் பற்றி சுஜாதா எழுதிய ‘கடவுள்களின் பள்ளத்தாக்கு’ என்ற கட்டுரையைப் படித்தபோது கொஞ்சம் வெலவெலத்தது.

“குளிருமாமே?”, “ஜட்டி கூட தெர்மல் வேரில் கிடைக்கிறது, ரிஸ்க் எடுக்காதீர்கள், வாங்கிக் கொண்டு போய்விடுங்கள்” என்ற அறிவுரைகளையும் “போன வாரம் நல்ல மழையாம், நேற்று நல்ல குளிர்... நாங்கள் போனபோது நிலச்சரிவு மாட்டிக்கொண்டோம்” போன்ற மிரட்டல்களையும் கடந்து பத்ரிக்குச் சென்றேன்.

இன்றைய செயற்கைக்கோள் யுகத்தில் அடுத்த ஐந்து மணி நேரத்தில் மழை வருமா என்று சொல்லிவிடலாம். இப்போது பத்ரியில் எத்தனை டிகிரி குளிர் என்று அலைபேசியில் கண்டுபிடிக்கலாம். ஆனால் இது எதுவுமே தெரியாத திருமங்கை ஆழ்வார் ஆடல்மா குதிரையில் எப்படிப் போயிருப்பார் என்ற வியப்பு இன்னும் எனக்குத் தீரவில்லை. ஆயிரம் வருடம் முன் ஸ்ரீ ராமானுஜர் கால்நடையாக பத்ரி சென்றார். இந்த நினைப்பே அங்கே என்னைப் போக வைத்தது.

ஹரித்துவார்

டெல்லியில் இறங்கி பேருந்தில் கரடு முரடான சாலை, விவசாயப் பேரணி எல்லாம் கடந்து ஏழு மணி நேரப் பிரயாணம் செய்து மாலை ஐந்து மணிக்கு ஹரித்துவார்

சென்றடைந்தோம். ஹிமாசலத்தின் அடிவாரத்தில் அமைந்த இந்த இடம், முக்தி தரும் க்ஷேத்திரங்களில் ஒன்று. இங்கேதான் கங்கை கடல் மட்டத்தில் ஓடுகிறது. பத்ரிக்கு மேலே 'சொர்கா ரோகிணி' என்ற இடம் இருக்கிறது. அதன் வழியாகத்தான் பாண்டவர்கள் சொர்கத்தை அடைந்தார்கள். அதற்கு இது வாசலாகத் (துவாரமாக) இருப்பதால்தான் இதை 'ஹரி' துவாரம் என்கிறார்கள். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பத்ரி ஸ்ரீ நாராயணனான 'ஹரி'யை அடையும் துவாரமாக இருக்கிறது.

ஹரித்வாருக்கு நாங்கள் போன சமயம் சின்ன இலைகளால் ஆன தட்டில் பூக்களுடன் சின்ன விளக்குகளைக் கங்கையில் விட்டுக்கொண்டு இருந்தார்கள். 'கங்கா ஆரத்தி' என்பது தினமும் நடக்கும் நிகழ்ச்சி. மணி ஓசை, கங்கையின் சலசலப்பு, கூட்டத்தின் ஆரவாரத்துடன் நம்முடைய இந்தியாவைப் பார்த்து ரசிக்கலாம்.

'ஓம் ஜெய் கங்கே மாதா' என்ற அனுராதா பாத்வால் பாடல் ஒலிக்கக் கூட்டத்தில் ஒரு வித மின்சாரம் பாய்வதை நாம் உணரலாம். இதே மாதிரி ஆர்த்தியை

நாம் ஸ்ரீரங்கம் காவிரிக் கரையிலும், திருநெல்வேலி தாமிரபரணியிலும் கொண்டு வர வேண்டும்.

மறுநாள் விடியற்காலை ஹரித்துவாரில் ஓடும் கங்கையில் ‘குள்ள குளிர குடைந்து நீராடிவிட்டு’ தேவப்பிரயாகை நோக்கிப் புறப்பட்டோம்.

**தேவப்பிரயாகை**

பேருந்து உள்ளே ஆழ்வார் பாசுரங்கள் சேவித்துக்கொண்டே ஜன்னல் வழியாக முறிந்த மரங்களில் துளிர்களையும், நிலச்சரிவுச் சுவடுகளையும், பம்புளிமாஸ் வியாபாரத்தையும் பார்த்துக்கொண்டே தேவப்பிரயாகை என்ற கண்டமென்னும் கடிநகர் வந்து சேர்ந்தோம்.

ஹரித்துவாரத்திலிருந்து சுமார் 100 கிமீ தூரத்தில் இருக்கிறது இந்தத் திவ்ய தேசம். 2720 அடி உயரத்தில் பெரியாழ்வார் ‘கண்டம் என்னும் கடிநகர்’ என்று பாடியுள்ளார். கண்டம் – பாரத கண்டம், கடி என்றால் சிறப்பான என்று பொருள்.

பத்ரிக்குச் செல்லும்போது வரும் முதல் திவ்ய தேசம் இது. பிரயாகை என்றால் ஆங்கிலத்தில் confluence என்று கூறுவர். தமிழில் சங்கமம். பாகீரதியும், அலகநதா

நதியும் சங்கமிக்கும் இடம் இது. சங்கமித்த பிறகு அதற்கு 'கங்கை' என்று பெயர்!

பஞ்சகச்சத்தில் வேட்டியின் கறை மேலும், கீழுமாக இருப்பது போல, பயணம் முழுவதும் கங்கை நம் கூடவே மேலும் கீழுமாக வருகிறாள். கூடவே ஜியோ ஃபைபர் கேபிளும் வருகிறது.

கங்கை நம் பாரத தேசத்துப் புண்ணிய நதிகளுக்குள் முதன்மையானவள். ஸ்ரீமந் நாராயணன் திருவிக்கிரமாவதாரத்தில் 'ஓங்கி உலகளந்த' போது அவரது இடது திருவடி பிரம்மாவின் சத்ய லோகத்தை அடைந்தது. நான்முகன் பக்தியுடன் புனித நீரால் கழுவ, அதுவே கீழே பரமசிவனின் திருமுடி வழியாகக் கங்கையாக நமக்கு மொத்தம் 2525 கிமீ ஓடுகிறாள். கங்கா என்றால் பூமியை நோக்கிக் கருணையோடு இறங்கி வந்தாள் என்று பொருள். கங்கோத்திரி என்ற மலையில் உள்ள பனிப் பாறையில் தொடங்கி, உத்ராஞ்சல், உத்திரப் பிரதேசம், பிஹார், வங்காளம் சென்று கடலில் கலக்கிறாள் கங்கை.

ஸ்ரீரங்கம் கோவிலில் தர்ம தரிசன வரிசைக் கூட்டம் அலை மோதிக்கொண்டு போகும். 250 ரூபாய் சீட்டு

வரிசை அதிகம் கூட்டம் இல்லாமல் மெதுவாகச் செல்லும். இரண்டு வரிசையும் சேர்ந்து பாகுபாடு இல்லாமல் ஒரே வரிசையாகச் செல்லும் இடத்தில் பெருமாள் தெரிவார். அதுபோல அலகநந்தா அடித்துப் புரட்டிக்கொண்டு வேகமாகவும், பாகீரதி மெதுவாகவும் வருகிறது. வந்து சேரும் இடம் புனித கங்கை ஆகிறாள்! இரண்டு நதிகளும் வெவ்வேறு நிறங்கள். சேர்ந்த பிறகு ஒரே நிறமாகச் செல்கிறது.

நலம் திகழ் சடையான் முடிக் கொன்றை மலரும்
நாரணன் பாதத் துழாயும்
கலந்து இழி புனலால் புகர் படு கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே
என்கிறார் பெரியாழ்வார்.

அதாவது பரமசிவனின் தலையிலிருந்த கொன்றை மலரும், பெருமாள் பாதத்திலிருந்த துளசியும் இங்கே இரண்டு நதிகளாக ஓடிவருகின்றன. நதியின் அழகை ரசிக்கும்போது, 2013ல் வெள்ளம் வரும்போது தண்ணீர் எதுவரை வந்தது என்ற இடத்தைக் காண்பித்தார்கள். பயமாகத்தான் இருந்தது. இங்கே ஸ்ரீராமானுஜர் வந்து தங்கியுள்ளார். அவருக்கு ஒரு கோவில் இங்கே உள்ளது.

கோவிலில் சயன திருக்கோலத்தில் இருக்கும் ஷேசசாயி பெருமாளும் உற்சவர் ராமானுஜரும் 2013ல் வந்த வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டார்கள். உற்சவர் ராமானுஜர் மட்டும் காப்பாற்றப்பட்டு பத்ரியில் இருக்கிறார். அதைப் பின்னர் பார்ப்போம்.

கண்டம் என்னும் கடிநகரில் இருக்கும் பெருமாள் நீலமேகப் பெருமாள், புருஷோத்தமன் என்று திருநாமம். ஸ்ரீராமராகச் சேவை சாதிக்கிறார். பெரியாழ்வாரும் இந்தப் பெருமாளை ஶ்ரீராமனாகவே பாடியுள்ளார். ஸ்ரீராமர் தவம் புரிந்தபோது அமர்ந்த மேடை ஒன்று இங்கே இருக்கிறது.

தமிழை வளர்க்கத் தமிழ்நாட்டில் கஷ்டப்படும்போது எங்கோ மலை உச்சியில் பெரியாழ்வாரின் பாசுரங்களைத் தமிழில் எழுதிப் போட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கும் நரசிம்ம சந்நிதிக்கு அவர்களே 'நரசிம்ம கோயில்' என்று சிகப்பு நிறத்தில் தமிழில் எழுதியிருக்கிறார்கள்!

பெரியாழ்வாரின் இந்தப் பாசுரம் மிக முக்கியமான ஒன்று.

மூன்று எழுத்து அதனை மூன்று எழுத்து அதனால்

மூன்று எழுத்தாக்கி* மூன்று எழுத்தை
ஏன்று கொண்டு இருப்பார்க்கு இரக்கம் நன்கு உடைய
எம் புருடோத்தமன் இருக்கை*
மூன்று அடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி
மூன்றினில் மூன்று உரு ஆனான்*
கான் தடம்பொழில்சூழ் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகரே.

மூன்று எழுத்தைப் பயப்படாமல் மெதுவாகப் படித்தால் அர்த்தம் புரியும். 'அ', 'உ', 'ம' என்ற மூன்று எழுத்தை 'அகாரம்' உகாரம்' 'மகாரம்' என்று மூன்று சொற்களாக்கி, ஓம் என்ற பிரணவமாக்கினார். பிறகு பிரணவத்திலிருந்து மேலும் வளர்ந்து 'ஓம் நமோ நாராயணாய' என்று உருவாக்கி, அதன்மூலம் ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் உள்ள மூன்று குணங்களை வெளிப்படுத்துகிறார். பிரணவம் எப்படி வளர்கிறதோ அதே போல திரிவிக்கிரம அவதாரத்தில் பெருமாள் மூன்று அடி நிலம் கேட்டு வளர்ந்தார். அந்தப் பெருமாள் கண்டம் என்னும் கடிநகரிலே இருக்கிறார் என்று பெரியாழ்வார் சொன்ன இடத்திலிருந்து அதை

விரிவாகத் தெரிந்துகொண்டு திருப்பிரிதிக்கு புறப்பட்டோம்.

**திருப்பிரிதி (ஜோசிமட்)**

ஜோஷிமட் என்று இன்று அழைக்கப்படும் இடமே திருமங்கை ஆழ்வார் பாடிய திருப்பிரிதி . என்று நம்பப்படுகிறது ஆனால் திருமங்கை ஆழ்வார் பாடிய திருப்பிரிதி வேறு இடத்தில் இருக்கலாம் என்று ஆன்றோர்கள் நினைக்கிறார்கள். ஏன் என்பதற்கு சில காரணங்கள்:

திருமங்கை ஆழ்வாரின் பாடல்களுடன் நாமும் பயணித்தால் பாரத தேசத்து திவ்ய தேசங்களின் பூகோள வரிசைப்படி இருக்கும். ஆனால் இந்தத் திவ்ய தேசம் மட்டும் வரிசையில் இல்லை.

திருமங்கை ஆழ்வாருடைய இன்னொரு சிறப்பு அந்த அந்தத் திருத்தலத்துக்குச் சென்று அந்தப் பெருமாளையும் இயற்கைக் காட்சிகளையும் பாடுவார். இந்தத் திவ்ய தேசத்தை வர்ணிக்கும் ஆழ்வார் 'நடம் செய்யும் தடம் சுனை' என்ற ஒரு ஏரியைப் பாடுகிறார். இங்கே ஏரி எதுவும் இல்லை.

இன்னொரு விஷயம் பெரியாழ்வார் தேவப்பிரயாகை குறித்துப் பாடும்போது கூடவே வரும் கங்கையைக் குறிப்பிடுகிறார். அதே போல் பத்ரியைப் பற்றிப் பாடும் திருமங்கை ஆழ்வார் பல பாடல்களில் கங்கையைக் குறிப்பிடுகிறார். ஆனால் திருப்பிரிதி கங்கைக்கரையிலிருந்தாலும் கங்கை பற்றிய குறிப்பு பாசுரங்களில் இல்லை. திருமங்கை ஆழ்வார் பாடும் திருப்பிரிதி பாசுரங்களில் 'இமயத்துள்' என்றும் எல்லாப் பாசுரங்களிலும் குறிப்பிடுகிறார். ஆனால் திருப்பிரிதி இமயத்துள் இல்லை.

ஆழ்வார் திருப்பிரிதி பெருமாள் 'அரவணை பள்ளிகொள்ளும் பரமா' என்று சயனத் திருக்கோலத்தில் இருக்கும் பெருமாளைக் குறிப்பிடுகிறார். ஆனால் இங்கோ நரசிம்ம பெருமாள் இருக்கிறார்.

ஆழ்வார் பாடிய திருப்பிரிதி இமயத்துள் திபெத் நாட்டில் மானசரோவர் ஏரிப்பக்கம் பக்கம் இருந்திருக்க வேண்டும். இன்று நரசிம்மரையே திருப்பிரிதி பெருமாளாக எல்லோரும் தரிசித்து வருகிறார்கள். நாமும் அவர்களைப் பின்பற்றித் தரிசிக்கலாம்.

பெங்களூரிலிருந்து எங்களுடன் யாத்திரைக்கு வந்தவர் இந்தப் பெருமாளுக்கு ஏலக்காய் மாலை சமர்ப்பித்தார். “ஏலக்காய் மாலை இந்தப் பெருமாளுக்கு விசேஷமா?” என்று கேட்டேன். அதற்கு அவர், “திருமங்கை ஆழ்வார் இந்தப் பெருமாளைப் பற்றிப் பாடும் முதல் பாசுரத்தில் ‘அன்று, ஏலம் நாறு தண் தடம் பொழில் இடம் பெற இருந்த நல் இமயத்துள்’ என்று பாடியிருக்கிறார். ஏலம் மணத்துடன் கூடிய நறுமணம் என்று ஆழ்வார் சொல்லியிருக்கிறார். அதனால் ஏலக்காய் மாலை சமர்ப்பித்தேன்” என்றார். ம‘ண’ம் இருந்தால் மார்க்கம் உண்டு.

பத்ரியில் வருடத்தில் ஆறு மாதங்கள் பனியால் மூடிவிடும். அப்போது அந்தப் பெருமாளை இங்கே கொண்டு வந்துவிடுவார்கள். அவருக்குப் பூஜை, ஆராதனம் எல்லாம் இங்கே தான் நடைபெறும். 25 கீமீ மேலே இருக்கும் பத்ரிக்குப் புறப்பட்டோம்.

**பத்ரி**

பதரிகாசிரமம் தானே உருவான திவ்ய தேசம். இதை ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரம் என்பார்கள். எட்டு எழுத்து மந்திரம் (பிரணவத்துடன் கூடிய நமோ நாராயணா)

அவதரித்த இடம். திருமங்கை ஆழ்வார் தனது பெரிய திருமொழியின் தொடக்கத்தில் இந்த எட்டு எழுத்து மந்திரத்தின் பெருமைகளை ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு வரும்போது பெற்ற தாயைக் காட்டிலும் நமக்கு நன்மை செய்யும் என்கிறார்.

பிறகு இந்த மந்திரத்தால் சொல்லப்பட்ட பெருமாளை திருப்பிரிதியில் தரிசித்து பாசுரங்கள் பாடுகிறார். அதற்குப் பிறகு இந்த மந்திரத்தை உபதேசித்த நாராயணப் பெருமாளைப் பதரிகாசிரமத்தில் பாடுகிறார்.

"பத்ரி வந்தாச்சு!" என்ற சத்தம் கேட்டுத் தூக்கத்திலிருந்து எழுந்தபோது மாலை ஐந்து மணி வெளியே இருட்டாக இருந்தது. பேருந்து ஜன்னல் வழியே உற்றுப் பார்த்தபோது கருப்பாக மலை மாதிரி தெரிந்தது. மேலே நட்சத்திரங்கள் மின்னியது. பேருந்திலிருந்து கீழே இறங்கியபோது குளிர் முகத்தில் அறைந்தது! 'ஏதாவது ஒரு அறையில் சென்று கதவைக் அடைத்துக்கொள்' என்று எல்லா உறுப்புக்களும் கெஞ்சின.

இருட்டில் யாரோ டார்ச் அடித்துக்கொண்டு வந்தார்கள். "உங்கள் பேருந்து நம்பர் என்ன?" – சொன்னோம்.

இதோ அங்கே இருக்கும் இடம்தான் நீங்கள் தங்கும் இடம் என்றார்கள். தூரத்தில் சின்ன விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. மீண்டும் பேருந்தில் ஏறினேன். "ஸ்வாமி! பஸ்ஸுள்ளே எதுக்கு போறீங்க? அங்கே நடந்துதான் போக வேண்டும். பஸ் அங்கே எல்லாம் போகாது" என்றபோது பத்ரி உடனடி முக்தி தரும் ஷேத்திரம் என்பது விளங்கியது.

நூறு அடி நடந்திருப்பேன். ஒலிம்பிக்ஸ் தங்கப் பதக்கம் வாங்கிய உணர்வு ஏற்பட்டது. ஏதோ ஒரு அறை ஏதோ ஒரு படுக்கை கிடைத்தால் போதும் என்று படுக்கையில் விழுந்தபோது குழந்தை உச்சா போனது மாதிரி ஈரமாக இருந்தது. "படுக்கை மழையில் நனைந்திருக்கும்" என்று சொன்னேன். "இங்கே இப்படித்தான். பனியில் நனைந்திருக்கும்" என்றார்கள். வெளியே தண்ணீர் சலசலப்பு ஓயாமல் கேட்டுக்கொண்டு இருந்தது. "என்ன சத்தம் இந்த நேரம்?" என்றேன். "கங்கை! காலை அங்கே குளிக்கலாமா?" என்றபோது ஆழ்வார் "கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடு வினை களையலாம்" என்று சொல்லியிருக்கிறார். சொன்னாலே போதும் எதற்குக் குளிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

“மணி ஏழு, பத்ரி கோயிலுக்குப் போய்விட்டு வரலாம்!” என்று யாரோ சொல்ல, பெட்டியைத் திறந்து பத்து நாளைக்கு எடுத்து வந்த துணிகள் எல்லாவற்றையும் ஒன்றாக அணிந்து சர்க்கஸ் கோமாளி மாதிரி புறப்பட்டேன்.

கோயிலுக்கு முன் பக்தர்கள் கூட்டமாக முண்டி அடித்துக்கொண்டு சென்று கொண்டு இருந்தார்கள். பக்தர்கள் கூட்டத்தில் நசுங்குவது குளிருக்கு இதமாகச் சுகமாக இருந்தது. கோயிலை விட்டு வெளியே வரும்போது நாளைக்கு இந்த நடுக்கும் குளிரில் குளிப்பது இருக்கட்டும், எப்படி வாய்க் கொப்பளிப்பது என்ற பயம் கவ்விக்கொண்டது.

பத்ரியில் நான்கு நாட்கள் தங்கினோம். தினமும் காலை கோயிலுக்குக் குளிக்கச் செல்லுவோம். குளிக்கவா? ஆச்சரியப்படாதீர்கள். கோயிலுக்கு வெளியில் ‘தப்த குண்டம்’ என்ற இடம் இருக்கிறது. இது ஒரு வெந்நீர் ஊற்றுக் குளம். இந்தக் குளிரில் வரும் பக்தர்கள் கஷ்டப்படக் கூடாது என்று பெருமாளே நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்த ஊற்று எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்று யாருக்கும்

தெரியாது. ஆனால் ஊற்று வரும் தொட்டி உள்ளே இறங்கினால் தப்த குண்டம் கொடுக்கும் கதகதப்பில் அது தவக் குண்டம் ஆகி, வெளியே ரம்பையும் ஊர்வசியும் வந்தால் கூட வெளியே வரமாட்டோம்.

குளித்துவிட்டு பெருமாள் சேவித்துவிட்டு வேளுக்குடி ஸ்வாமிகள் திருமந்திரத்தின் அர்த்தத்தை அது தோன்றிய இடத்திலிருந்து தினமும் சில மணி நேரம் உபதேசிப்பார். உணவு, பிறகு மீண்டும் திருமந்திரத்தின் உபதேசம். மாலை கோயில் என்று நான்கு நாட்களும் எங்களுக்கு இதுதான் தினசரி வழக்கமாக இருந்தது. பத்ரி பற்றிய திருமங்கை ஆழ்வார் பாடல்கள் சிலவற்றைப் படித்தால் இதைப் போல் ஓர் இனிய அனுபவம் மீண்டும் கிடைக்குமா என்று தெரியவில்லை.

திருமங்கை ஆழ்வார் 'வதரி வணங்குதுமே' என்று பத்ரி குறித்துப் பாடிய பாசுரங்களை நோக்கினால் 'நொந்து நூடுல்ஸ் ஆவதற்குள்' பத்ரிக்குச் சென்று வந்துவிடு என்று சொன்னது எவ்வளவு நிஜம் என்பது புரியும்.

முதல் பாசுரத்தைப் பார்க்கலாம்

முற்ற மூத்து, கோல் துணையா,

முன்னடி நோக்கி வளைந்து*

இற்றகால் போல், தள்ளி, மெள்ள
இருந்து அங்கு இளையாமுன்*
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி
பெரு முலை ஊடு* உயிரை
வற்ற வாங்கி உண்ட வாயான்
வதரி வணங்குதுமே.

முதுமை முற்றிய காலத்தில் ஊன்றுகோல் கொண்டு கூன் முதுகிட்டு, காலை முன்னே வைக்க யோசித்து, எங்காவது தடுமாறி முறிந்துவிடப் போகிறது என்று மெள்ள உட்காரும் கிழட்டுத்தனம் வரும் முன்பே பூதனையின் உயிரைக் பாலுடன் உண்ட கண்ணன் இருக்கும் இந்த அரிய வதரியை வணங்கிவிடு என்று ஆரம்பித்து, அடுத்தடுத்த பாசுரங்களில் மேலும் கூறுகிறார்.

ஒரு கையால் கொம்பு ஒன்றை ஊன்றி உடல் நடுங்கி நடக்கும்போது மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும். கண்களில் பீளை வழியும். பேச்சில் கோழையோடு இருமல் மேலிடும். நரம்புகள் புடைக்கும். இளம் பெண்கள் ‘சீச்சீ இந்தக் கிழவனைப் பாரேன்!’ என்ற கிழட்டுத்தனம் வரும் முன்னே வண்டுகள் இசைபாடும்,

அழகிய நீருடைய கங்கைக் கரைமேல், எங்கும் பூத்துக்குலுங்கும் சிறப்பு மிக்க வதரியை வணங்கு என்கிறார்.

எல்லா பொருட்களின் மீதும் ஒரு காலம் ஒட்டிக்கொண்டு இருக்கிறது. உதாரணமாகத் தென்னை மரம், மண் பானை, குழந்தை என்று எல்லாவற்றிலும் ‘காலம்’ இருக்கிறது. காது ஓரத்தில் நரைத்த முடி திடீரென்று ஒரு நாளில் முளைத்தது அல்ல. நரைமயிரை எதிர்த்து உங்களால் போராட முடியாது. டை அடித்துக்கொள்ளலாம் ஆனால் அந்த ‘டைக்கு’ கூட expiry date என்ற ஒரு காலம் உண்டு.

திருமங்கை ஆழ்வார் சொன்ன இந்தக் கிழட்டுக் குறிப்புகளில் பல பத்ரி சென்றபோது என்னிடம் எட்டிப்பார்த்தது. இந்தப் பத்து பாடல்களைப் படித்தால், ஒவ்வொரு நாளும் முதுமை நமக்கு வருகிறது என்பதை உணர்த்தி, ஆழ்வார் ஏன் அவசரப்படுத்துகிறார் என்பது புரியும்.

திருமங்கை ஆழ்வார் சொன்ன இந்த முதுமையை என் கண்முன்னே நான் பார்த்தேன். அதைப் பற்றி விவரிக்கும் முன் பத்ரியின் முக்கிய மலைகளைப் பற்றிச்

சொல்லுகிறேன். பத்ரிகாசரமம் நான்கு மலைகளுக்கு நடுவில் இருக்கிறது. ஒரு புறம் பனிபடர்ந்த நீலகண்டமலை. இன்னொரு புறம் ஊர்வசி பர்வதம். நாராயண பர்வதம் இன்னொன்று சிறிய நர பர்வதம்.

முதல்முதலாக நீலகண்ட மலை. ஒரு நாள் காலைப் பார்த்தபோது அப்படியே அதன் அழகில் மயங்கினேன். மயங்கியதற்குக் காரணம் அது இந்திய வரைபடம் போன்ற வடிவத்திலிருந்தது. நான் பார்த்த அதன் மீது உள்ள பனி வெள்ளி போல ஜொலித்தது.

இந்த மலையைச் சூர்யோதயத்தின்போது பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தேன். கூட இருந்தவர்களிடம் இதைச் சொன்னபோது “திரும்பப் பெங்களூர் போகும் எண்ணம் இல்லையா? பேசாமல் போர்த்திக்கொண்டு படுங்கள்” என்றார்கள். கேமராவும் கையுமாகத் தனியாகக் கிளம்பினேன். இருட்டு, குளிர். கூட்டமாகக் கருப்பு நாய்கள். பார்க்க ஓநாய் மாதிரி இருந்தது. திருமங்கை ஆழ்வார் கையில் வைத்திருக்கும் வேலை நினைத்துக்கொண்டு அருகில் சென்றேன். அவை எனக்கு வழி விட்டன. ஆனால் அதற்குள் என்

அட்ரினல் சுரப்பிகள் வேலை செய்து குளிருடன் நடுங்கினேன்.

கேமராவை வைத்துக்கொண்டு காத்துக்கொண்டு இருந்தேன். என் வாழ்கையில் மறக்க முடியாத அந்தக் காட்சி வர ஆரம்பித்தது. இருபதே நிமிடங்களில் முடிந்தது.

முதலில் மலை உச்சி தங்கம் போல மின்னியது. பிறகு மெதுவாகச் சூரியன் மலை முழுவதையும் ஆக்கிரமித்து முழு மலையும் வெள்ளி போலக் காட்சி அளித்தது. கேமராவை கிளிக் கூடச் செய்ய முடியாமல் கை விரல்கள் விரைத்துப் போயிருந்தன!

இந்த அற்புத காட்சியைச் சுமார் நூறு படங்கள் எடுத்தபின், திருமங்கை ஆழ்வார் விவரித்த அந்த முதுமை காட்சியைக் கண்டேன்.

ஒரு வயதான பெண்மணி பத்ரி பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்று தன் மகனுடன் நடந்து போகிறாள். அப்படியே சரிந்து விழுகிறாள். அவளுடைய மகன் ‘உனக்கு முடியாது என்று எவ்வளவு தடவை அடித்துக்கொண்டேன். பிடிவாதம் உனக்கு’ என்று கண்டபடி ஏசுகிறான். தன் அம்மாவைத் தூக்க

முடியாமல் தூக்குகிறான். எழுந்தவள் மீண்டும் சரிந்து விழுகிறாள். பக்கத்திலிருந்தவர்கள் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். மருத்துவமனை இல்லை, சிக்னல் இல்லை. வயதான அந்த அம்மா பேசமுடியாமல் விரலை நீட்டுகிறாள். கண்ணில் தீர்மானமும், நீட்டிய இடத்தில் மலை இடுக்கில் பத்ரி கோயிலும் தெரிகிறது.

சுமார் 10,800 அடி உயரத்தில் இருக்கும் பத்ரி பெருமாள் கோயிலுக்குள் சென்றவுடன் கருடன் நம்மை வரவேற்கிறார். அவருக்கு ஒரு வணக்கம் சொல்லிவிட்டு நுழைந்தால் கர்பகிரஹம் தெரிகிறது. மூலவர் பதரிநாராயணப் பெருமாள். பத்ரிவிஷால் என்று பெயர். தாயார் அரவிந்தவல்லி தாயார்.

நடுவாகப் பதரிவிஷால் பெருமாள் இலந்தை மரத்துக்குக் கீழ் பத்மாசனத்தில் அமர்ந்த தியானத் திருக்கோலம். இவருடைய திருமேனி சாளக்கிராமத்தால் ஆனது. தங்கக் குடையின் கீழ், ரத்தின கிரீடம், வண்ண வண்ண கற்கள் பதிக்கப்பட்ட மாலைகள் அணிந்து கொண்டு சேவை சாதிக்கிறார். நான்கு திருக்கரங்கள். மேல் நோக்கி இருக்கும் கரங்களில் சங்கு சக்கரம், கீழ் நோக்கி

இருக்கும் கரங்களைத் தன் மடியில் வைத்துக்கொண்டு இருக்கிறார்.

பெருமாளின் வலதுபக்கம் கருடன் அவர் அருகே குபேரன் இருக்கிறார். இடதுபக்கம் நாரதரும் அவருக்கு அருகே உத்தவரும். நர நாராயணர்கள் இருவர் என்று மொத்தம் ஏழு மூர்த்திகள் இருக்கிறார்கள்.

'நர நாரணனாய், உலகத்து அற நூல் சிங்காமை விரித்தவன்' என்கிறார் ஆழ்வார். அதாவது பெருமாளே நாராயணன் என்ற ஆசாரியனாகவும், அவரே நரன் என்ற சிஷ்யராகவும், இரட்டை வேடத்தில், சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக இங்கே இருக்கிறார்.

பத்ரி பெருமாளை மூன்று முறை தண்ணீருக்குள் இருந்து மகான்கள் கண்டெடுத்து பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். முதலில் அலகநந்தா நதிக்குள். அடுத்து நாரத குண்டத்திற்குள். மூன்றாவது முறை தப்த குண்டத்திலிருந்து.

கண்டமென்னும் கடிநகர் என்ற இடத்தில் 2013ல் வந்த வெள்ளத்தில் பெருமாள் மற்றும் ராமானுஜர்

விக்கிரகங்கள் அடித்துச் செல்லப்பட்டார்கள், உற்சவர் ராமானுஜர் மட்டும் காப்பாற்றப்பட்டார் என்று முன்பு சொல்லியிருந்தேன். அந்த உற்சவர் விக்கிரகத்தை பத்ரியில் ஒரு இடத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்.

நாங்கள் இந்த ராமானுஜரை பல்லக்கில் அமர்த்தி ஊர்வலமாகப் பாசுரங்கள் சேவித்துக்கொண்டு பத்ரி கோயில் வாசல்வரை வந்து பத்ரி பெருமாளுக்கு உகந்த பாசுரங்களைப் பாடினோம். ஸ்ரீராமானுஜரை என் கையால் எழுந்தருளச் செய்ய முடிந்தது என் வாழ்நாளில் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன்.

இந்தியாவின் கடைசி கிராமம் மாணா என்ற இடத்துக்கு ஒரு நாள் கிளம்பினோம். இயற்கைக் காட்சிகளை விவரிக்க முடியாது. மாணா கிரமத்துக்குச் செல்லும்போது அடிக்கடி ‘மூட் ஸ்விங்ஸ்’ வந்தது. எனக்கு இல்லை பத்ரிக்கு. அங்கே காலைப் பத்து மணிக்குச் சூரியன் பளிச் என்று அடித்தால் கொஞ்சம் இதமாக இருக்கும். அதே சூரியன் மேகத்தில் மறைந்து கொஞ்சம் ‘மூடியாக’ இருந்தால் நமக்குக் குளிர் நடுங்கும்.

கிராமம் போகும் வழியில் ‘பீம் பூல்’ என்ற பீமன் திரௌபதிக்காக ஏற்படுத்திய பாலம், பேரிரைச்சலோடு சரஸ்வதி நதி பூமிக்குள் செல்லும் இடம் (அதற்குப் பிறகு சரஸ்வதி நதி அலகாபாத்தில் உள்ள திரிவேணி சங்கமத்தில் கங்கா, யமுனா, சரஸ்வதி கலக்கும் இடம்) கலக்கிறாள். பாண்டவர்கள் சொர்க்கத்தை நோக்கிச் சென்ற ‘சுவர்க்கா ரோகிணி’ வாசலுக்குச் சென்றபோது ‘இப்படியே நடந்து சென்றால் நான்கு நாட்களில் சொர்க்கம் வரும்’ என்றார்கள், திரும்பிவிட்டேன்.

வியாச குகைக்குள் சென்று வியாச பகவனைச் சேவித்துவிட்டு சற்று தூரம் நடந்தபோது இந்தியக் கொடி ஒன்று பறந்துகொண்டு இருக்க, அதற்கு ஒரு சல்யூட் அடித்துவிட்டு இன்னும் கொஞ்சம் தூரம் நடந்தபோது ‘இந்தியாவின் கடைசி டீக்கடை’ என்ற பலகையைப் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

வரும் வழியில் ஸ்வெட்டர்கள் விற்கிறார்கள். ‘உல்’ விற்கும் அந்த அப்பாவி மக்களைப் பார்க்கும்போது ‘உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவர்கள்’ என்று தெரிகிறது. எப்போதும் முகத்தில் அப்படியொரு சிரிப்பு!

பத்ரி பயணம் பேருந்தில்தான். பேருந்துகள் பள்ளத்தாக்கின் விளிம்பில் (கீழே கங்கை) போவதும், தப்பித்தவறியும் மலைமேல் படாமல் செல்வதும் (இடித்தால் நிலச்சரிவு ஏற்படும்) பார்க்க ஏதோ சினிமாவில் கிராபிக்ஸ் மாதிரி தோன்றும். ஓட்டுநர் மீது நம்பிக்கை. அவர் பத்ரி பெருமளை சேவிக்க வைத்து மீண்டும் கீழே கொண்டு வந்தும் விடுகிறார் (அலுவலகம் இருக்கிறதே)

உடி ஆலன் ஒருமுறை, "மறுபிறவியில் எனக்கு நம்பிக்கை இல்லை, ஆனால் எதற்கும் இருக்கட்டுமே என்று ஒரு செட் மாற்று ஜட்டி, பனியன் எடுத்துப் போவேன்" என்றார். திருமங்கை ஆழ்வார் சொன்ன 'நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்ற எட்டு எழுத்து மந்திரம் அவதரித்த பத்ரியில் அதன் உட்பொருளைக் கேட்டபிறகு மாற்று ஜட்டி, பனியனுக்கு அவசியமே இல்லை.

**சுஜாதா தேசிகன்**

**வலம் ஜூன் 2020 இதழில்**